SWATHANTRA SANGU

Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

18712

கோகலே ஹால் கச்சேரி

(படத்துடன்)

முன்சிப்புக்கு முட்டுதல்—தமாஷ்

கொலையாளிக்கு பென்ஷன்

—டால்ஸ்டாயின் சிறு கதை.

குழந்தைகள் ஆசை

(படங்கள்)

அனந்த சக்தி

(கவி. சுப்பிரமணிய பாரதியார்)

தெய்வமிருந்தால்

(திலீபன்)

மான நஷ்டம்

மார்கழி மலர்

(கதை)

புத்தகம் 4. மார்கழி, 22 (5-1-34) வெள்ளி இதழ் 6.

தமிழில் வெளி வந்து விட்டது!

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்

(மகாத்மா காந்தி எழுதியது)

முதல் பாகம் (264 பக்கங்கள் கொண்டது) விலை ரூ. 1—0—0

மகாத்மா காந்தி முதன் முதல் சத்தியாக்கிரகத்தை நடத்தி வெற்றி கண்டது தென்னாப்பிரிக்காவில் தான். அதன் சரித்திரத்தை மகாத்மா தாமே எழுதியிருக்கிறார். இதில் பல உருக்கமான நிகழ்ச்சிகளும், உயர்ந்த தத்துவங்களும், தென்னாப்பிரிக்காவைப் பற்றிய பல விவரங்களும், அங்கு இந்தியர் நிலைமைகளும் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த முதல் பாகத்தில், ஐரோப்பியரின் பலத்த எதிர்ப்புக்கிடையே மகாத்மாஜீ தென்னாப்பிரிக்காவுக்குள் பிரவேசித்து, பல ஆபத்துக்களுக்கும் ஆள்பட்டு, பெரிய தொரு சத்தியாக்கிரகப் போரை நடத்தி, சர்க்காருடன் முதல் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது வரையிலுள்ள அரிய சரித்திரம் அடங்கியிருக்கிறது.

சுதந்திரச் சங்கு காரியாலயம், ௮-C, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription:

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of 2¼" × 9".

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office: 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா:

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ.	40	0	0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ.	20	0	0
கால் பக்கத்திற்கு " "	ரூ.	10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ.	1	8	0

ஒரு பக்கம் 2¼" x 9" அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-C, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே"

போன் நெ. 8088

ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] மார்கழி மீ 22உ வெள்ளிக்கிழமை (5—1—1934) [No. 6

கோகலே ஹால் கச்சேரி

வைரமும், புஷ்பராகமும் கொட்டிக் கிடக்கும்போது கண்ணாடித் துணுக்கைப் பற்றி யாரும் கவனிக்கமாட்டார்கள். ஆனால் கண்ணாடித் துணுக்கு மட்டுமே தென்பட்டால் கவனிக்காமலென்ன செய்வது? இந்த வருடம் டிஸம்பர் மாதத்தில் நமது நாட்டின் ராஜீய விஷயத்தைப் பற்றிப் பேசுவதற்குக் கூடிய மகாநாடு ஒன்றே ஒன்று தான். சென்னை கோகலே ஹாலில் நடைபெற்ற அந்த மிதவாதிகள் மகா நாட்டைப் பற்றிப் பல அறிஞர்களின் அபிப்பிராயமும் பல பத்திரிகைகளின் கருத்தும் ஒரே விதமாய்த்தான் இருக்கிறது. "புதிய மெட்டில் பாடுவதாகத் தோன்றிய போதிலும் பல்லவி பழைய பல்லவியே" என்பது பெரும்பாலோர் அபிப்பிராயம்.

வலங்கிமான் ஸ்ரீனிவாச சாஸ்திரிகளுக்கு உடல் நிலை சரியாக இல்லாததால் இன்னொருவர் வரவேற்புப் பிரசங்கம் செய்யவேண்டி நேர்ந்தது. தலைமை வகித்த ஸ்ரீயுத ஜே. என். பாசு அவர்களும் அக்கிராஸன பீடத்திலிருந்து தமது பேருரையை அவிழ்த்துக் கொட்டினர். வடக்கேயிருந்து சிந்தாமணி முதலிய மிதவாதிப் பிரமுகர்களும் சிலர் வந்திருந்தனர். யார் வந்தாலென்ன, யார் வராமற் போனாலென்ன? வெறும் நாற்காலிகளை வரிசையாக வைத்துவிட்டு வாசாம கோசரமாகப் பிரசங்கம் செய்யச் சொன்னாலும் தயங்காத வீரர்கள் மிதவாதிகளல்லவோ? ஆகவே தங்கள் ஒப்பாரிகளை யெல்லாம் ஒரு வழியாக மிதவாதிகள் பாடித் தீர்த்தார்கள். துரைத்தனத்தாரின் வெள்ளைக் கடுதாசித் திட்டத்தைத் தாக்கி கண்டனப் பாட்டு பாடினார்கள். இத்தகைய கண்டனம் ஆயிரத்து எட்டாவது தடவை. இந்த வெற்றுக் கண்டனத்தினால் ஸிம்லா தேவதைகள் தூக்கத்தினின்று ஒருபோதும் எழுந்திருக்கா வென்பதை இந்த ஜன்மத்தில் மிதவாதிகள் அறிந்து கொள்ளப் போவதில்லை.

Courtesy: ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

வெள்ளைக் கடுதாசிக் கீர்த்தனை

"வெள்ளைக் கடுதாசித் திட்டம் கலப்பு ஜாதி மிருகம்!" என்று ஸ்ரீயுத சிந்தாமணி தாக்கினாராம். என்ன சொன்னாலென்ன? ஆனால் இதே வெள்ளைக் கடுதாசித் திட்டத்தை ஏற்று நடத்தி, பிரிட்டிஷ் எஜமானைத் திருப்தி செய்விக்க, மிதவாதிகளே முன்னணியில் நிற்பார்கள். இந்தக் கோஷ்டியின் சரித்திரமே பிச்சை யெடுக்கும் புராணமன்றோ!

மாபெரும் ஸ்தாபனமாகிய காங்கிரஸ் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருக்கும்போது, தேசமக்களின் சிகரமாகிய காந்திஜி தமது வாயை வேணுமென்றே மூடிக் கொண்டிருக்கும் போது ராஜீய விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு வந்து விட்டார்களாம் இவர்கள். வெட்கக்கேடு! "காங்கிரஸைத் தடுத்துள்ள இந்த அரசாங்கத்தின் பிடிவாதப் போக்கைக் கண்டிப்பதற்கு அறிகுறியாக இந்த வருடம் நாங்கள்கூட மகாநாடு கூடப்போவதில்லை" என்று சொல்லியிருந்தார்களானால், இவர்களுடைய கவுரவமும் நாட்டின் கவுரவமும் கொஞ்சமாவது உயர்ந்திருக்குமென்பது நமது அபிப்பிராயம்.

ஆனால் அன்று கோகலே மண்டபத்தில் நடந்த இவர்களுடைய கச்சேரியை 'அன்னத்தின் பாட்டு' என்று தான் கூறவேண்டும். அன்னம் சாகும்போது ஒரு பாட்டுப் பாடிவிட்டுப் பிராணனை விடுமாம். அதே மாதிரி கூடிய சீக்கிரத்தில் 'மிதவாதிக் கோஷ்டி' என்பது இந்த நாட்டில் மறைந்தே தீருமென்பது நிச்சயம். அப்படித்தா னிருந்தது மகாநாட்டின் பிரதிநிதித்துவமும். தேச ஆவேசமும், தீவிர அபிப்பிராயங்களும், தியாகங்களும் வளர்ந்துகொண்டு சுதந்திரத்துக்காகப் பாடுபடும் நாட்டில், இத்தகைய வௌவால் சங்கீதம் எத்தனை நாளைக்கு நடக்கும்?

எல்லாம் 'தேச பக்தி'யாம்

"இந்தியர்களாகிய நம்மிடம் அரசியலதிகாரம் தருவதற்கு முன் வியாபாரச் சலுகை வேண்டுமென்று பிரிட்டன் கோருவது நியாயமே. ஆகவே 'சுயராஜ்ய' ஆசையினாலேயே அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம்" என்று ஒட்டாவா நகருக்குச் சென்று திரும்பிய வீரர்கள் சொன்னார்கள். 'தேசபக்தி' மிதமிஞ்சி வழிந்ததால், அந்தக் காரியம் செய்தார்களாம்!

"இந்தியாவுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அரசியல் திட்டத்தை லங்காஷயர் பிரதிநிதிகள் பார்லிமெண்டில் எதிர்த்தால் என்ன செய்வது? ஆகவே நமது தேச நன்மையை முன்னிட்டுத் துணி வியாபார விஷயத்தில் நாம் அவர்களுக்கு விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும்" என்று எண்ணி, பம்பாய் ஆலைப்புலி மிஸ்டர் மோடி என்பார் மோடி—லீஸ்—ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டாராம்!

பர்மிங்ஹாமிலிருந்து இறக்குமதியாகும் இரும்புச் சாமான்களின்மீது இந்தியா விதிக்கும் சுங்க வரியை எடுத்து விடவேண்டுமாம். இல்லாவிட்டால் பார்லிமெண்டில் இந்திய அரசியல் திட்டத்தை பிரிட்டிஷ் இரும்பு வியாபாரிகள் எதிர்ப்பார்கள். "இந்தியாவின் நன்மையைக் கோரி இந்த விஷயத்தில் விட்டுக் கொடுத்து விடலாம்" என ஓர் இந்திய வியாபாரி சொல்கின்றாராம். அவர் இரும்புச் சாமான் வரவழைத்து விற்பவரெனத் தெரிகிறது. அவரும் தமது 'தேச பக்தி'யை எடுத்துக் காரணம் காட்டுகிறார். நல்ல தேச பக்தி!

இதே மாதிரி இந்தியாவின் 'நன்மை'க்காக 'இரயில்வே போர்டு' ஒன்று ஏற்பட வேண்டுமென்கிறார் இன்னொருவர். வைஸ்ராய்க்கு கஜானா சாஸ்திரம் சொல்லிக் கொடுக்க நல்ல சம்பளத்தோடு ஓர் 'மேதாவி'யை நியமிக்கவேண்டும் என்கிறார் வேறொருவர். இப்படியாக எல்லாம் "இந்தியாவின் நன்மைக்கே" என்று வியாக்கியானம் செய்யப்படுகிறது. போதுமையா இந்தத் தேச நன்மைகள்! இந்த முதலாளிக் கூட்டத்தின் தில்லு மில்லுகளும், உத்தியோக வேட்டைக்காரர்களின் சூழ்ச்சிகளுமே நாளுக்கு நாள் நமது நாட்டை நாசமாக்கி வருகின்றன. இந்தப் போலிக்கூட்டத்தின் சேஷ்டை எத்தனை நாளைக்கு நடக்கிறதோ பார்க்கலாமென்று உண்மைத் தேசபக்தர்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்.

'முத்தண்ணா'வுக்குப் 'பிஞ்சின்'

கடைசியாக முத்தண்ணா ஷவுகத் கலி சர்க்கார்மீது தயவு கூர்ந்து விட்டார். 1930-ம் ஆூ நவம்பர் மாதத்தினின்று அதாவது முத்தண்ணா வட்ட மேஜை மகாநாட்டுக்குப் போனாரே—அந்த மாதத்தினின்று கணக்குப் போட்டு, சர்க்காரிடம் பென்ஷன் வாங்கிக் கொள்வதென தீர்மானித்து விட்டார். என்ன பென்ஷனா? ஆமாம். முத்தண்ணா 17 வருஷகாலம் அபினி இலாக்காவில் சர்க்கார் உத்தியோகம் பார்த்தாரென்பதும், அவரது சிலாபத் இயக்கம் காரணமாக பென்ஷன் நிறுத்தப்பட்டதென்பதும், போன மாதத்தில் மீண்டும் தொடங்கப்பட்டதென்று அறிவிக்கப் பட்டதும் பழங் கதை ஆகிவிட்டது. ஏதோ சாதுவாகப் 'பிஞ்சின்' காரராக அந்திய காலத்தைக் கழிக்க அண்ணா தீர்மானித்து விட்டார் போலும்!

மீன் கூடைக் கதை

'சேம பாங்கி' மசோதாவைப் பற்றி டெல்லிச் சட்டசபையில் வாக்குவாதம் நடந்தபோது பஞ்சாப் பிரதிநிதி மிஸ்டர் பூரி ஒரு வேடிக்கைக் கதை கூறினார்.

"ஒரு பேர்வழி மீன் கடைக்கு வந்து பேரம் பேசினான். கடைக்காரன் அசதி மறதியாக இருந்த சமயம் பார்த்து ஒரு மீனை எடுத்து அந்தப் பேர்வழி தனது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு திரும்பினான். மீனின் வால் பைக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்ததைக் கவனித்த கடைக்காரன் அவனைக் கூப்பிட்டான். பேர்வழியும் மீண்டும் கடைக்காரனிடம் சென்றவுடன் அவன் சொன்னான். "ஐயா! உம்மோடு சண்டைபோட வேண்டுமென்பது என் விருப்பமல்ல. ஆனால் உமக்கு ஒரு யோசனை மட்டும் சொல்லித்தர விரும்புகின்றேன். இனிமேல் எடுப்பதனால் சிறிய மீனாக எடுத்துப் பையில் போட்டுக்கொள்ளும் அல்லது சட்டைப் பையையாவது பெரியதாகத் தைத்துக்கொண்டு இவ்வளவு பெரிய மீனை எடுத்துக்கொள்ளும்" என்பது அவனது குத்தலான வார்த்தை.

நாணயமாற்று விஷயம், இந்தியக் கடன் விஷயம், சேம பாங்கி விஷயம், இவைகளெல்லாவற்றிலும் இந்தக் கதையைப்பற்றி அரசாங்க அதிகாரிகள் நினைப்பூட்டிக் கொள்ளவேண்டும் என்பது எமது ஆசை.

'உள்ளாக்கட்டி'க்கு

சீமையில் இந்தியா-பிரிட்டன்-யூனியன் என்பது ஓர் சங்கம். இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வராமல் கடைசி வரை தடுப்பதென்பது இந்தச் சங்கத்தாரின் கொள்கை. இந்தச் சங்கத்தார் ஒரு பொதுக் கூட்டம் கூடுவதென ஏற்பாடு செய்து பத்திரிகைகளுக்கு விளம்பரம் அனுப்பியிருந்தார்கள். வாசகர்கள் மனதைக் கவர்ச்சி செய்ய அந்த விளம்பரத்தின் தலைப்பில்,

> "வேந்தனையும் காந்தியையும்
> ஈசன் காப்பாராக"

என்று கொட்டையெழுத்தில் போடப்பட்டிருந்ததாம். அவ்வளவுதான். அந்தக் கூட்டத்தில் பிரசங்கம் செய்ய இருந்தவர், "ஹா! சக்கரவர்த்தியைக் காக்கும் ஈசன் காந்தியையும் காக்க வேண்டுமென்று அதே குரலில் சொல்லவா?" என்று கண்டித்து உறுமினாராம். விளம்பரம் செய்தவர் "நான் 'உள்ளாக்கட்டி'க்கு—விளையாட்டாகவே அந்த விளம்பரம் போட்டேன்" என்று சால்ஜாப்புச் சொல்லியும் முன்னவரின் முனகல் நிற்கவில்லையாம். இந்த மகான்களின் ஆசீர்வாதம் இல்லாமலேயே கடவுள் காந்திஜியைக் காத்து வருகிறாரென்ற செய்தியை நாம் சீமைக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கா' என்றாலே காபுராவா?

"காந்திஜி சென்னை மாகாணத்தில் பிரயாணம் செய்தால் அதனால் கலவரமேற்படலா மென்றும் ஆகவே அவர் இம்மாகாணத்துக்கு வரவொட்டாமல் ஓர் தடை யுத்தரவு போடலாமே" என்று சென்னைக் கவர்னர் வைஸ்ராய்க்குச் சிபார்சு செய்து உத்திரவு கேட்டாராம். சீமையிலிருந்தும் சிம்லாவிலிருந்தும் உத்தரவு கிடைக்கவில்லையாம். ஆகவே காந்திஜியின் பிரயாணம் தடுக்கப்பட வில்லையாம். இப்படி ஓர் வதந்தி உலவுகிறது. 'காந்தி', 'காங்கிரஸ்' முதலிய பதங்களிலுள்ள 'கா' என்ற அட்சரத்தை ஆரம்பித்த வுடனேயே சில ஸிவிலியன்கள் உதறியெழும் இயல்புட னிருக்கிறார்கள். அவர்களைப் போலவே சென்னைக் கவர்னருமாவென்று நாம் ஆச்சரியப்படுகின்றோம். மகாத்மாஜி இப்போது செய்யும் பிரயாணமோ சமூக சேவை சம்பந்தமானது. இதற்கே ஸர் ஜார்ஜ் ஸ்டான்லி இவ்வளவு எண்ணி யிருப்பாரா? அப்படியானால் இனிமேல் இவர் ஆக்டிங் வைஸ்ராயாக இருக்கப் போகின்றாராமே, அப்போது என்னென்ன செய்வாரோ?

"போய்ச் சொல்லுமையா"

வைஸ்ராய் வில்லிங்டன் சென்னைக்கு விஜயம் செய்தபோது ஒரு கனவானிடம் விசாரித்தாராம். "இப்போது காந்திஜி ஏதேதோ பிரசாரம் செய்து வருகிறாரே. அதனால் அவரது செல்வாக்கு இந்த மாகாணத்தில் குறைந்திருக்கிறதல்லவா?" என்று கேட்டாராம். இதை மதராஸ் மெயில் பத்திரிகையில் ஒரு கனவான் எழுதியிருக்கிறார். காந்திஜிக்கு இந்த நாட்டில் செல்வாக்கு இருககிறதா இல்லையா என்பதை சென்னைக் கடற்கரையைக் கேட்டாலே சொல்லும்; சென்னைச் சேரிகளைக் கேட்டாலும் பதில் கிடைக்கும். இந்தப் பதிலைத் தெரிந்து கொண்டவுடன் வில்லிங்டன் என்ன செய்யப்போகிறார்? அவர் ரஜா எடுத்துக்கொண்டு சீமைக்குப் போகப் போகின்றாராமே, அங்கேயுள்ள அதிகாரிகளுக்கு காந்திஜியின் செல்வாக்கைப்பற்றி விவரித்து உருப்படியாக ஏதேனும் செய்யலாமன்றோ!

இனி என்ன குறைவு?

இந்தியாவுக்கு இனி என்ன குறைவு? ரைட் ஆனரபில் பட்டம் பெற்றவர்கள் மூன்று பேர் இந்தியருள் இருக்கின்றனர். சக்கரவர்த்தியாரின் பிரிவி கவுன்ஸிலில் அவர்கள் அங்கத்தினராக்கப் பட்டிருக்கின்றனர். வலங்கிமான் ஸ்ரீனிவாச சாஸ்திரி பழைய ரைட் ஹானரபிள். புதிதாக ஸர் தேஜ்பகதூர் ஸாப்ரூ, ஆகாகான் இருவரும் புதிய வருஷப் பட்டமளிப்பின் போது பிரிவி கவுன்ஸில் ஜர்ப்தாவில் சேர்க்கப் பட்டிருக்கின்றனர். ஆனால் பிரிவி கௌன்ஸில் சபைக்கு ஒரு காலத்தில் இருந்த அநேக அதிகாரங்கள் பிடுங்கப் பட்டு விட்ட சரிதத்தைச் சட்டம் அறிந்தோர் கூறுகின்றனர்.

ராஜபுத்ர சமஸ்தானங்கள்
மகா நாட்டுக்கு

ஜவஹர்லால் விடுத்துள்ள செய்தி

சுதந்திர இந்தியாவிலும் சமஷ்டி அரசியலே இருக்கக்கூடும். ஆனால் வெள்ளைக் கடுதாசி சொல்லும் சமஷ்டி அரசியலை தூள் தூளாக உடைத்தெறிந்தால்தான் நாட்டுக்குச் சுதந்திரம் கிட்டும். ஆகவே இந்த ஆஷாடபூதிச் சமஷ்டியை எவரும் நம்பலாகாது. நமது எல்லை பூரண ஸ்வராஜ்யம்; அதாவது அந்நியருக்குத் துளிக்கூட நம்மீது அதிகாரமிருக்காத ஓர் அரசியல்; ஜனநாயகமாகவும் அவ்வரசிய லிருக்கும். இப்போதுள்ள இந்தச் சுதேச சமஸ்தானங்கள் அமைப்பைச் சுதந்திர இந்தியா வேரோடு கல்லி யெறிந்துவிடும்.

கிராமபோன் பிளேட்மீது ஆதிக்கம்

'சங்கீதக் கலைக்குக் குறை வுண்டாக்கத்தக்க ஆபாசப் பாட்டுகளைச் சில கிராமபோன் கம்பெனியார் தயாரிக்கின்றபடியால் எந்தெந்தப் பிளேட்டுகளை விற்கலாமென்பதை அநுமதிக்க, சர்க்கார் ஓர் கமிட்டி ஏற்படுத்தவேண்டும்' என்ற பொருளுடைய ஓர் தீர்மானத்தைச் சென்னை மியூஸிக் அகாடமி நிறைவேற்றி யிருக்கிறது.

ஹிட்லரின் குணாதிசயங்கள்

[ஜெர்மன் தேசத்தில் இன்று சர்வாதிகாரியாக வீற்றிருந்து அரசு புரியும் ஹெர் ஹிட்லரைப் பற்றி, அவருடைய சகோதரி ஒரு பத்திரிகை நிருபரிடம் பின்வரும் சில குறிப்புக்களைக் கூறியிருக்கிறார்.]

சின்ன வயதிலேயே அவன் யாருக்கும் அடங்கமாட்டான். நான் அவனை விடப் பெரியவள் தானே? இருந்தாலும் பால்யத்திலேயே என்னை அசாத்தியமாக அதிகாரம் பண்ணுவான்.

எனது புருஷன் மூன்று குழந்தைகளை விட்டு விட்டுச் சண்டையில் மடிந்தான். என் சங்கடத்தை உணர்ந்த ஹிட்லர் தன்னுடனேயே தங்கியிருக்கும்படி என்னை அழைத்தான். நானும் சம்மதித்தேன். சென்ற ஐந்து வருஷங்களாக நாங்களிருவரும் சேர்ந்து வசிக்கிறோம். அவன் என்னை ராஜீயத்தில் இழுத்துப் போட்டுக் கஷ்டப்படுத்துவதில்லை. அவனுடைய ராஜீயத் தொல்லைகளை மட்டும், அவனேதான் அனுபவித்துக் கொள்ளுகிறான்.

என் தம்பிக்கு மனைவியோ குழந்தைகளோ கிடையாது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு அவன் மாமிசம் சாப்பிடுவதை விட்டொழித்தான். "சாராயத்தைக் குடித்து என் நரம்புகளைத் தளர்த்திக் கொள்ளக்கூடாது" என்று சொல்லி, அவன் அதையும் விட்டு விட்டான். எப்பொழுதும் புத்தகமும் கையுமாகத்தான் இருப்பான். நன்றாகப் பாடுவான்; அடிக்கடி பாடுவான். சிட்டுக் குருவி மாதிரி ஓயாமல் எதையாவது செய்து கொண்டே யிருப்பான். எப்பொழுதாவது நல்ல புத்திசாலிக் குழந்தைகளைப் பார்க்கையில், "நான் கல்யாணம் செய்துகொள்ளாம லிருப்பது தப்புத்தான்; இந்த மாதிரி குழந்தைகள் எனக் கிருக்கவேண்டாமா?" என்று சொல்வான். ஆனால் உடனே புத்தி மாறிவிடும். "சே! என்ன சொன்னேன்; நான்தான் ராஜீயத்தை மணந்து கொண்டிருக்கிறேனே! எனக் கெதற்கு மனைவி?" என்பான். கல்யாணத்தைப் பற்றி எண்ணுவதற்கு அவனுக்கு நேரமேது?

சிரித்த முல்லை

(பாரதி தாஸன்)

மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன். குளிர்ந்த தென்றல் வந்தது.
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது.
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்.
சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டாடை கட்டிப் படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க் கொடி கண்டேன் மகிழ்ச்சி கொண்டேனே.

திப்புவின் புதவருட ஜோஸ்யம்

ஜனவரி மாதத்தில்

இந்த மாதத்தில் இந்தியாவில் சந்தோஷமும், துக்கமும், சஞ்சலமும் சமமாகத்தா னிருக்கும். கோப்பை என்ற கிரகம் ஸாஸர் என்ற கிரகத்தைப் பார்ப்பதால், புதுப்பட்டம் பெற்றவர்கள் ஏராளமான சிற்றுண்டிக் கச்சேரிகளை நடத்துவர். ராகுவை சனீஸ்வரன் விழுங்குவதால் அநேக மகாநாடுகளில் நிறைவேறிய தீர்மானங்கள் 'காஸ்' ரூபமாக ஆகாயத்தில் போய் விடும். குருவை (வியாழனை) சுக்ரன் (வெள்ளி) தொடர்ந்து வருவதால் ஸர் வி. பி. என்ற ஒருவர் இராணுவ மெம்பர் பதவிக்கு அடிப்போட்டுக் கொண்டிருப்பார்.

பிப்ரவரி மாதத்தில்

அசுவாதிபதி ஆகாகான்! ஆதலால் இந்தியாவில் ஏராளமாகக் குதிரைப் பந்தயங்கள் நடக்கும். அநேகர் மனமொப்பிப் பொருளிழந்து சந்தோஷப்படுவர். இரண்டாங் கந்தாயம் சொத்தையாக இருப்பதால் சுமார் ஆறு சுதேச மன்னர்களாவது அரசாங்கத்தினின்று தூரதேசப் பிரயாணத்துக்கு அனுப்பப்படுவார்கள். காராக்கிரகம் தணிந்து பார்க்குமாதலால் சில தேசியக் கிளர்ச்சிக்காரர் சிறையிலிடப் படுவார்கள்.

மார்ச் மாதத்தில்

மார்ச் மாதத்தில்தான் ஜுலீயஸ் ஸீஸர் குத்தப்பட்டான். மார்ச் மாதத்தில்தான் காந்திஜி தண்டி யாத்திரை புறப்பட்டார். இந்த மார்ச் மாதத்திலும் இந்தியாவில் சில சம்பவங்கள் நடைபெறும். எட்டுப் பெரியார்கள் வரிப் பணத்தினின்று 'பேட்டா' பெற்றுச் சீமைக்குப் பிரயாணமாவார்கள்.

ஏப்ரல் மாதத்தில்

விசேஷ மதிகமில்லை. இரண்டு ஆடுகளை ஒட்டவைத்துத் தைத்துக் காட்சி காண்பித்து, தென்னிந்தியாவில் ஒருவன் அதிகமாகக் காசு சேர்ப்பான்.

மே மாதத்தில்

தொழிலாளர் இயக்கம் இந்தியாவில் வலுக்கும். ஆனால் சரியான தலைவர்கள் கிடைக்கமாட்டார்கள். தமிழ் நாட்டில் ஹரிஜன னொருவனைக் கோயிலுக்குள் விட மறுத்ததோடு அவன் காலையும் முறித்ததால் அந்தக் கோயிலின் தெய்வம் கோபித்துக்கொண்டு போய்விடும்.

ஜூன் மாதத்தில்

கர்ப்பத்தடைப் பிரசாரம் வெகு மும்முரமாகும். ஆனால் தமிழ் நாட்டில் அறுபது புதுப் பத்திரிகைகள் தோன்றும். கடுதாசிப் பஞ்சமும் ஏற்படும். இந்த மாதத்தின் கடைசியில் நரகத்திலும் சொர்க்கத்திலும் வேலை நிறுத்தம் ஏற்படும். ஆகவே பூலோகத்தில் சாவே கிடையாது. தற்கொலை செய்து கொள்ள முயன்றவர்கள் கோரிய காரியம் கை கூடாமல் தவிப்பார்கள்.

குறிப்பு:—
அடுத்த ஆறு மாதத்துக்கும் பலன் கேட்க விரும்புவோர் ஆயிரம் ரூபா ஸ்டாம்பு அனுப்பினாலும் இப்போது சொல்ல முடியாது.

பிரஜோற்பத்தி வீரர்கள்

தமிழ் நாடக மேடையில் நடிகர்கள் "போட்டாப் போட்டி" போடுவார்கள் என்று அடிக்கடி நாடக விளம்பரப் பிரசுரங்களில் நாம் படிக்கிறோம். "இன்று பாமா விஜயம் என்ற நாடகம் நடத்தப்படும்; ருக்மணியும், பாமையும் போட்டா போட்டி போட்டுத் தர்க்கம் செய்வார்கள். இன்று பவளக்கொடி சரித்திரம் நடைபெறும். சக்களத்தியின் போட்டித் தர்க்கம் தத்ரூபம்!" என்றெல்லாம் விநோதமாக நாடக நோட்டீஸ்களில் அச்சிடப் படுவதை நாம் படிக்கிறோமல்லவா? நாகரிகத்தில் சிறந்த ஐரோப்பாவில் இப்பொழுது வேறொரு விதமான போட்டி வெகு மும்முரமாக நடந்து வருகிறதாம்; "அது என்ன ஐயா?" என்று நீங்கள் கேட்பீர்கள். குழந்தைகளைப் பெறுவதில் ஜெர்மனி, பிரான்சு இத்தாலி போன்ற தேசங்களிலுள்ள மக்கள் பந்தயம் வைத்துப் போட்டி போடுகிறார்களாம்! 'ஐந்திற்குமேல் அரசனும் ஆண்டியாகிவிடுவான்' என்று நம் நாட்டில் நாடோடியாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அது அக்காலம். இக்காலத்தில் ஐரோப்பாவில் குழந்தைகளை உற்பத்தி செய்தவண்ணமா யிருக்கிறவர்கள் பாடுதான் கொண்டாட்டமா யிருக்கின்றது. பிரான்சிலும், ஜெர்மனியிலும் "கல்யாணம் செய்து கொண்டால் பரிசு; முதல் குழந்தை பிறந்தால் பரிசு; அடுக்கடுக்காகக் குழந்தைகளை உற்பத்தி செய்த வண்ணமா யிருந்தால் சாசுவதமான பென்ஷன்" என்று அரசாங்கத்தார் பரிசு கொடுத்த வண்ணமா யிருக்கிறார்களாம். ஒருவன் பத்து அல்லது இருபது குட்டிகளைப் பெற்றுவிட்டால், அவனுக்கு முடையே கிடையாது. அதுவன்றோ அரசாங்கம்! நமது இலங்கையிலும், இந்தியாவிலும் குசேல மகா முனிவரை வென்ற பிறஜோற்பத்தி வீரர்கள் எத்தனையோ பேர்க ளிருக்கின்றார்களே? அக்காலத்திய குசேலர் அவல் பொதியோடு துவாரகைக்குப் போனார். இக்காலத்திய குசேலர்கள் உமி மூட்டைகளோடாவது ஜெர்மனி, பிரஞ்சு நாடுகளில் போய்க் குடியேறக் கூடாதா?

—"வீரகேசரி"



மார்கழி மலர்

(அசுவதி)

சூர்யன் இன்னும் முழுதும் உதிக்கவில்லை. அதற்குள் அன்று சச்சி படுக்கையினின்று எழுந்து விட்டாள். கண்ணைத் துடைத்துக் கொண்டு வாசற் பக்கத்துக்கு வந்து வீதியைக் கிழக்கும் மேற்கும் ஒரு பர்ர்வை பார்த்தாள். அவள் கண்கள் அதிசயமடைந்தன. ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் கோலமிட்டுப் புஷ்பங்களைப் பரப்பியிருந்தார்கள். குழந்தை யுள்ளத்தில் அக் காட்சி எழுச்சியை உண்டாக்காதா?

வாசற்படியில் நின்றபடியே சச்சி—அதுதான் ஸரஸ்வதியை ஊரார் அழைத்த பெயர்—முற்றத்தில் பாத்திரம் துலக்கிக் கொண்டிருந்த தாயாருக்கு, தான் கண்ட அதிசயத்தை வருணித்தாள்.

"அம்மா! பூ அம்மா! ஒவ்வொரு வாசலிலும் நிறைய பூ வைத்திருக்கா அம்மா! பூவெல்லாம் முழுச்சு முழுச்சு சிரிக்கிறாப்பலே இருக்கு, அம்மா!" என்றாள்.

முற்றத்திலிருந்த தாயார் தன் குழந்தைக்குப் பதில் கூறினாள்:

"இது மார்கழி மாஸம்! ஊரெல்லாம் பூமாதேவிக்கு அலங்காரம் பண்ணுகிறா. கோலம் போட்டு, பூ வச்சு...."

"ஏன் அம்மா நம்ம வாசலில் ஒன்றும் வைக்கல்லே நீ" என்று கேட்டுக் கொண்டே சச்சி உள் பக்கம் திரும்பினாள். அத்தனை வீட்டு வாசலும் புஷ்பத்தோடு கொஞ்சிக் கொண்டிருந்த போது, தன் வீட்டு வாசல் வெறுங் கோலத்தோடு இருப்பது அக்குழந்தையின் உள்ளத்தைத் தைத்தது:

உள்ளிருந்து தாயாருடைய குரல் கேட்டது.

"அவா வீடுகளில் பூ, கொண்டுவர பண்ணையாள் உண்டு. நமக்கு யார் இருக்கிறா? தோட்டம் இருக்கு. பறித்துக் கொண்டு வந்து வைக்கிறா. நமக்கு என்ன இருக்கு?" இதைச் சொல்லும் போது தாயாருடைய குரல வர வர கம்முவது போல சச்சிக்குத் தோன்றிற்று. ஆகவே குழந்தை வாசலினின்று அம்மாவை நோக்கி வந்தாள். அம்மா ஏதோ வருத்தப்படுவது போல தோன்றிற்று சச்சிககு.

"போனாப் போறது, அம்மா! ஆளும் வாண்டாம். தோட்டமும் வாண்டாம். வாசலில் இந்தப் பூ விற்காதா? வாங்கியாவது பூ வச்சா வாசல் அழகாயிருக்குமம்மா!" என்று கேட்டாள் குழந்தை. அந்தப் பூ ஜோடிப்பு குழநதையின உள்ளத்தைக கவாந்து விட்டது. கெஞசுகினற பாவனையில் அவள் தாயாருகே கொஞ்சிக் குழறிக் கேட்டுக் கொணடிருந்தாள.

மரகதத்தம்மா என்ன செய்வாள்? குழநதையின் ஆசையைப் பூர்த்தி செய்வது எவ்வாறு? "சச்சி நீ வாசல்லே போய்ப் பாரு. யாராவது பூஷணிப்பூ விறறுக் கொண்டு போனால் என்னைக் கூப்பிடு!" என்று போக்குச் சொல்லி அனுப்பினாள. பூ விற்றுக் கொண்டு யாரும் போகமாட்டார்களென்பது மரகதத்தம்மாளின் எண்ணம். குழந்தை வாசலுக்குக் குதித்துக் கொண்டு ஓடிப் போய விட்டாள். ஆனால் அப்போதுதான் மரகதத்தம்மாள் தனது வறுமை நிலையைப் பறறிச் சிநதிககத் தொடஙகனாள். இறந்த கணவனது ஞாபகம் வநதது. வாசலில் பூ வநது விட்டதானால் வாங்குவதற்கு ஒரு சல்லி கூட இல்லையே, என் செயவது என்று மனதில் எண்ண மேற்பட்டது. இப்படித் தாயார் சிந்தனையிலிருக்கும் போதே,

"அம்மா பூ! பூ! பூக்காரர் வரார்! வாங்கு அம்மா!" எனக் குழந்தையின் குரல் கேட்டது.

தாயார் தனது கைகளை அலம்பிக் கொண்டு, முந்தாணியில் கைகளைத் துடைத்துக் கொண்டே வாசலுக்கு வந்தாள். பெரியதாகவும் நல்லதாகவுமுள்ள மூன்று புஷ்பங்களை அந்தக் கூடையிலிருந்து எடுத்தாள். அப்போது சச்சியின் முகமும், அந்த மலர்களைப் போலவே மலர்ந்து விளங்கியது.

"ஐயா! பூக்கார ஐயா! நாளைக்குக் கூட மூன்று பூ வேணும். மொத்தம் ஆறு பூவுக்கும் என்ன விலை?" என்று கேட்டாள் தாயார்.

"அம்மா இந்த மூன்று பூவுக்கும் இப்போதே கொடுத்துடுங்க. காலணாத் தான். இதுக்குக் கூடவா கடனுங்க! நாளைக்கு இந்தப் பக்கம் வருவேனோ வரமாட்டேனோ, சொல்ல முடியாதுங்க" என்று கூறினான் அவன்.

"இல்லையப்பா குழந்தை கேட்குது" என்று எவ்வளவோ சொல்லியும் "காலையிலே கடன் கிடையாது" என்று வாய் கூசாது அவன் சொல்லி விட்டான். ஸரஸ்வதியின் முகம் அப்போது இறங்கி விட்டது. ஆகவே மரகதத்தம்மாள் தனது லஜ்ஜையைக் கட்டி வைத்து விட்டு அடுத்த வீட்டு, தங்கம்மாளைக் கூப்பிட்டு, "பூ வந்திருக்கு. சச்சி என்னை நச்சுகிறா. காலணா இருந்தா கொடுங்க. நாளைக்கு தர்ரேன்" என்று வாய் விட்டுக் கேட்டாள். "மரகதம் என்ன செய்யறது. சில்லறையில்லை. ஒரு ரூபாயிருக்கு" என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் போய்விட்டாள் அவளும்'

பூசணிப் பூக்களைக் கூடையில் போட வேண்டியதாயிற்று. சச்சியின் முகமும் வெயிலில் காய்ந்த மலர் போல வாடத் தொடங்கிற்று. பூக்காரர் "பூசணிப்பூ பூசணிப்பூ!" என்று கத்திக்கொண்டே போகத் தொடங்கினார். சச்சியின் பார்வை அந்தக் கூடையோடேயே பிரயாணம் செய்யத் தொடங்கியது. மனத்தை அந்தக் கூடையோடேயே அனுப்பி விட்டாள் போலிருந்தது. "போனாப்போகிறது. நாளைக்கு வாங்கி வைப்போம்" என்ற தாயாரின் தேறுதல் மொழிகள் அவள் காதிற் படவில்லை. அம்மா வீட்டுக் காரியங்களைக்

கவனிக்க உள்ளே போய் விட்டாள். குழந்தை சச்சி திண்ணை யருகிலேயே நின்றிருந்தாள்.

ஊர்ப் பெண்களெல்லாம் விழித்துக் கொண்டு விட்டனர். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஒன்று இரண்டு பேராக நின்றுகொண்டு கோலங்களையும் அவைகளின் மீதிருந்த புஷ்பங்களையும் கண்டு பெருமிதங் கொண்டிருந்தனர். மலர்களின் கவர்ச்சி சச்சியைத் திண்ணையில் உட்காரவிடவில்லை தன் வீட்டில் இல்லாவிடினும் பிற வீடுகளில் வைத்திருப்பதையாவது போய்ப் பார்த்து வரலாமென வெண்ணி சச்சி நகர்ந்தாள்.

அந்த வீட்டு வாசலில் நாலைந்து சிறுமிகள் நின்று கொண்டிருந்தனர். சச்சி வரவும், "அடி அடி! சச்சி வராள்! அவா வாசல்லே பூ வைக்கல்லேடி!" என்றாள் ஒரு சிறுமி. இச்சொற்கள் சச்சியின் காதைத் தைத்தன.

"அவ இங்கேருந்து பூவை எடுத்துண்டு போயிடுவாளோடி?" என்று கேட்டாள் ஒரு சிறுமி.

"ஜாக்ரதையாய்த் தானிருக்கணும்!" என்று 'உஷார்' கூறினாள் இன்னொருத்தி. இதையும் கேட்டுக்கொண்டே சச்சி அங்கு போய் நின்றாள்.

கீழே ஷண்முக சக்கிரம் மாதிரி கோலம் போட்டு அதன்மீது பூஷணி, பரங்கி, சங்கப்பூ இவ்வாறு பதினைந்து புஷ்பங்கள் வெகு அழகாக வைக்கப் பட்டிருந்தன. கோலத்திற்காக எறும்புகளும், புஷ்பங்களுக்காக தேனீக்களும் சுற்றிக்கொண்டிருந்தன. சச்சி அங்கிருந்தபடியே தன் வீட்டு வாசலை நோக்கினாள். மறுபடியும் வீதி முழுதும் வீட்டுக்கு வீடு வைக்கப்பட்டிருந்த மலர்களை நோக்கினாள். "எடு என்னை!" என்று அந்த நடுவிலிருந்த புஷ்பம் சொல்வது போலிருந்தது. அந்தப் பெண்களும் வேறு ஏதோ பேசிக் கொண்டு பாராதிருந்தனர். "இவ்வளவு பூ இருக்கும்போது ஒன்று எடுத்துக் கொண்டாலென்ன?" என்ற எண்ணம் அந்தக் குழந்தையின் மனதில் குடிகொண்டது. அந்த எண்ணம் வந்ததற்கு யாரைக் காரணம் கூறுவது? அதே உணர்ச்சி வேகத்தில் சச்சி குனிந்தாள்; ஒரு மலரை யெடுத்தாள்; விர்ரென்று வீடு நோக்கி ஓட ஆரம்பித்தாள். அதிக தூரம் போகவில்லை—அதற்குள் 'திருடி! திருடி'! என்று ஓர் பெண் கத்திற்று. சச்சியின் பின்னலைப் பிடித்து இன்னொன்று இழுத்து விட்டது. பலமான இழுப்பு. மேல் தாவணியைப் பற்றி இன்னும் யாரோ வலித்தார்கள். அந்த வேகத்தில் அங்கு கீழே யிருந்த ஓர் கல்லில் கால் இடறி சச்சி விழுந்து விட்டாள். சவுந்தர்யம், ஏமாற்றம், ஆசை, அவமானம் இத்தனை உணர்ச்சிகளும் அடுக்கடுக்காய் அலை மோதிய மனத்தோடிருந்த அச்சிறுமி மூர்ச்சை யடைந்தாள். கல்லில் மோதி அவளது தலையில் சின்னக் காயமொன்றும் ஏற்பட்டிருந்தது.

அரைமணி கழித்து 'பூ எங்கே அம்மா?" என்று குழறிக்கொண்டே சச்சி கண் விழித்தாள். தான் ஓர் கயிற்றுக் கட்டிலின்மீது கிடப்பதையும், அருகே யாராரோ நிற்பதையும் ஒருவர் விசிறிக் கொண்டிருப்பதையும் சச்சி சரியாகக் கவனிக்கவில்லை. சச்சி தனது கையைப் பார்த்தாள். அடுத்த வீட்டு வாசலிலிருந்து எடுத்த புஷ்பம் அவளது கையிலேயே இருந்தது. அதைக் கூர்ந்து கவனித்துவிட்டு விட்டெறிந்தாள். "பூ வாண்டாம் அம்மா! அம்மா நீ எங்கே!" என்று சச்சி சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே அழவாரம்பித்தாள். "அசடே இதோ வந்து விட்டேன். பூவுக்காக இப்படிப் பண்ணலாமோடி. அதோ பாரு கூறையின்மேலே!" என்று கூறிக்கொண்டே மரகதத்தம்மாள் பிளாஸ்திரி யோடு அங்கு வந்தாள். சச்சி எதிரே தெரிந்த அந்தக் கூரையைக் கவனித்தாள். பூசணிக் கொடி படர்ந்திருந்தது. பச்சைப் பசேலென்ற கொடிகளின் நடுவில் நூற்றுக் கணக்கான புஷ்பங்கள் தங்களை மிளுக்கிக்கொண்டு கூரையின் மீது குந்தியிருந்தன.

கதரை அணியுங்கள்

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1932ம் வருஷ முடிவில் அமுலிலிருந்த பாலிஸிகளின் மொத்த தொகை ரூ. 8,13,60,271
மொத்த ஐவேஜிகள் .... ரூ. 1,90,00,000-க்கு மேல்
செலுத்தப்பட்ட உரிமைகள் .... ரூ. 1,00,00,000-க்கு மேல்

பத்திரமும், திடமும் வாய்ந்த பாலிஸிகள்

விசேஷப் பத்திரத் தன்மை பெற்ற பலவகையான பாலிஸிகள்; மிகக் குறைந்த பிரீமிய விகிதங்கள்.

ஸ்திரீகளின் ஆயுட்களும் இன்ஷ்யூர் செய்யப்படுகின்றன.
கூட்டு லைப் பாலிஸிகள் வெளியிடப்படுகின்றன.
கெடுத் தவறுவதற்கு சாசுவதப் பாதுகாப்பளிக்கப்படுகிறது.
வசீகரம் வாய்ந்த வசதிகள்.

இக்கம்பெனிக்கு வேலை செய்வது ஏஜண்டுகளுக்குச் சுலபமானது; அவர்களுக்கு அதிக ஊதியமும் கிடைக்கின்றது.

பூரா விவரங்களுக்கும் தயவு செய்து கீழ்க்கண்டவர்களுக் கெழுதவும்.

நெருப்பு அண்டு மோட்டார் கார் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு, கீழ்க் கண்டவர்களைக் கன்ஸல்ட் செய்யுங்கள்.

நாஷனல் பயர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி,
பிராஞ்சுக் காரியதரிசி,
113, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

ஏ. வி. தியாகராஜா,
ஆர்கனைசிங் செக்ரடரி,
171, புதுத் தெரு, மதுரை.

முனிசீப்புக்கு முட்டுதல்

"சுந்து"

வாரச்சோறு சாப்பிட்டு எவ்வளவோ சிரமப்பட்டு பி. ஏ. பரீக்ஷையில் தேறினேன். பிறகு திவான் பகதூர்.......... அவர்களிடம் 'அப்ரெண்டிஸ்' ஆக அமர்ந்து ஒரு வருஷத் தபசும் முடிந்தது. ராஜதானியில் முனிசிப் வேலைக்கு மனுக்கள் கொடுக்கும் தருவாய் வந்தது. என் அதிருஷ்டத்தைச் சோதிக்க வேண்டு மென்று திவான் பகதூர் என்னிடம் கூறினர். இந்த மாதிரியே தனது கடைசி மாப்பிள்ளைக்கும், மூத்த மருமகனுக்கும் திவான் பகதூர் உபதேசம் செய்து விட்டார். நாங்களெல்லாரும் மனுப் போட்டோம். வேலை ஆனாலும் சரி ஆகாத போனாலும் சரி, மனுவோடு சமர்ப்பிக்கும் கட்டணமும், மெடிகல் ஸர்டிபிகேட் வாங்கும் பணமும் யானை வாயில் போன கரும்பு தானல்லவா?

அடிக்கடி தம்மிடம் மனுதார்கள் வந்து தொந்தரவு செய்யக்கூடாதென்று ஜட்ஜ் சொல்லி விட்டாராம். வீட்டு வாசலில் ஒரு நாயையும் சேனைக்காரனையும் காவல் நிறுத்தி வைத்தாராம். ஆனல் மகானுபாவன், குறிப்பிட்ட ஒரு நாளில் நபர்கள் வந்து பார்க்கலா மென்று ஒவ்வொருவருக்கும் எழுத்து மூலம் தகவல் அனுப்பியிருந்தார். இரண்டு நிமிஷ நேரத்தில் பேட்டியை முடித்துக் கொண்டு திரும்ப வேண்டு மென்று தாக்கீது போடப் பட்டிருந்தது. நாங்கள் குறிப்பிட்ட தினத்தில் அந்தப் பேசும் தெய்வத்தின் ஆசார வாசலண்டை போய் நின்றோம். அபேட்சகர்கள் உள்ளே போவதும் மற்றொரு வாசல் வழியாய் வெளி வருவதும் ஈசல்கள் புற்றில் நுழைந்து திரும்புகின்ற காட்சி மாதிரி இருந்தது. சுமார் ஆயிரம் பேர் இந்தப் போட்டா போட்டிக்கு மனுப் போட்டிருந்தார்களென்றால் கேட்க வேண்டுமோ?

எனக்கு இருந்த லவலேச ஆசையும் அந்த மாபெருங் கூட்டத்தைப் பார்த்தவுடனே பறந்து போய் விட்டது. ஆயினும் உள்ளே ஜட்ஜ் எப்படி ஒவ்வொரு மனுதாரரையும் விசாரிக்கிறாரென்பதையாவது அறிந்து கொள்ளலாமென்று நினைத்து வாசற்படியண்டை போய் நின்று கொண்டு ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

1. முதலில் ஒரு அய்யர் கூப்பிடப் பட்டார்.

கேள்வி:—எந்த ஊர்?

பதில்:—பாலக்காடு

ஜட்ஜ்:—பாலக்காட்டுப் பிராமணர்கள் இந்த இலாகாவில் ஏராளமாக இருக்கிறார்கள். உங்களுக்கு சான்ஸ் தருவதற்கில்லை. போகலாம்.

2. இரண்டாவது ஒரு மகமதியர் நுழைந்தார்.

கேள்வி:—எந்த ஊர்?

பதில்:—பட்டணம். ராவுத்தர் வகுப்பினன். எங்களில் ஒருவர் கூட இவ்வேலையில் இதுவரை இருந்ததில்லை.

ஜட்ஜ்:—சரி. ஆனல்! நீங்கள் பட்டாணி இல்லையே! ஷீயா இல்லையே! ஆதி 'கான்வர்ட்' போலிருக்கு. கான்வர்ட்டுகள் விஷயம் 'கன்ஸிடர்' பண்ணித்தான் ஆகவேண்டும். தற்சமயம் போய்வாரும்.

3. ஜனப் ஸைதுல்லா பார்-அட்-லா. "நான் மாஜி எக்ஸிக்யூடிவ் கவுன்ஸிலராயிருந்த....கான் பகதூர் பேரன். பார்-அட்-லா."

ஜட்ஜ்:—ஓ! உங்களைப் போன்ற பெரிய சந்ததி ஆட்களுக்கு முன்சீப் உத்தியோகம் எந்த மூலைக்கு? ஏழைகளுக்குத்தான் முதலில் உதவி செய்ய வேண்டும். நீங்கள் போகலாம்.

4. ....பிள்ளை எம். ஏ. எம். எல். நுழைந்தார்.

"நான் கருட்டாலூர் சைவ வகுப்பைச் சார்ந்தவன். எம். எல். பரீக்ஷையில் மெடல் வாங்கி யிருக்கிறேன்."

ஜட்ஜ்:—எத்தனை வருஷம் வக்கீல்? தொழில் வரி எவ்வளவு தருகிறீர்? வருமான வரி எவ்வளவு?

விடை:—நான்கு வருஷம். தொழில் வரி 8 அணு; வருமான வரி இல்லை.

ஜட்ஜ்:—அநுபோகமே போதாது. தொழில் அப்பியாசமே இருந்திருக்காது போலிருக்கு. போகலாம்.

5. ஸ்ரீ.........முதலியார். பி. ஏ., எம். எல். எல். டி. பார்-அட்-லா.

ஜட்ஜ்:—உமக்கு எவ்வளவு ஐயா அநுபோகம்? எவ்வளவு வரும்படி வரும்?

விடை:—ஆறு வருஷம். மாதம் 250 ரூபா சராசரி வரும்படி.

ஜட்ஜ்:—கரும்புபோல அதை விட்டு விட்டு இந்தத் தொல்லையில் ஏன் ஐயா மாட்டிக் கொள்கிறீர்? போய் வாரும்.

7. ஸ்ரீ...கவுண்டர் B. sc. (Lon.) பார் அட்லா: "எங்கள் குலத்தினர் எனக்குக் காருண்ய துரைத்தனம் இந்த உத்தியோகத்தைத் தரவேண்டுமென்று தீர்மானம்கூடச் செய்திருக்கின்றனர்."

ஜட்ஜ்:—வேறு குவாலிபிகேஷன் உண்டா?

விடை:—நான் யு. டி. லியில் இருந்திருக்கிறேன். அகில இந்திய டென்னிஸ் சாம்பியன்ஷிப் மெடல் உண்டு.

ஜட்ஜ்:—நீர் அடிக்கடி லீவு கேட்டுச் சர்க்காருக்குத் தொந்தரவு கொடுப்பீர். ஆகவே தயவு செய்து டென்னிஸ் ஆடியே உங்கள் காலத்தைச் செலவழியுங்கள். போகலாம்.

8. ஸ்ரீ. கிருஷ்ணசாமி அய்யர். பி. ஏ. பி. எல். நுழைந்தார்.

"நான் ஜஸ்டிஸ்.... அவர்களின் மாப்பிள்ளை. அவர் சிபார்சு செய்யக்கூடாதென்ற நோக்கத்தோடு சும்மா இருக்கிறார். மற்றும் நான் மாஜி அட்வகேட் ஜனரலின் மருமகன். அவருக்கும் அதே யோசனை. பெரியவர்களுக்குக் கட்டுச் சுமந்து சுமந்து தோள் குறுகிப்போய் விட்டது. பென்ஷன் உத்யோகமாக ஏதாவது பிடித்தாக வேண்டும். நான் தங்கள் கோர்ட்டில் ஆஜராகாத போனாலும் நான் சொல்லிக் கொடுத்ததையே மற்றவர்கள் அங்கு பேசுகிறார்கள். ஆகவே.......

ஜட்ஜ் :—அதான் கோர்ட்டில் பேத்தல் ஜாஸ்தியாயிருக்கிறது. குட்மார்னிங். போய்வாருங்கள்.

கடைசியாக “நான்” புகுந்தேன். இந்த ஜட்ஜை ஒரு கை பார்த்து விடுவதென்று தீர்மானித்திருந்தேன்.

ஜட்ஜ் :—எத்தனை வருஷம் வக்கீல் வேலை?

பதில் :—முனிஸீப் வேலைக்கு மனுப்போட எத்தனை வருஷ அநுபோகம் வேண்டும்?

ஜட்ஜ் :—என்ன வரும்படி?

பதில் :—என்ன வரும்படி வந்திருந்தால் பொறுக்குவீர்கள்?

ஜட்ஜ் :—கிடக்கட்டும். நீர் எந்த சர்க்கார் உத்தியோகஸ்தருக்காவது பந்துவா?

பதில் :—முன்ஸீப் பதவி பெறுவதற்கு எந்த உத்தியோகஸ்தருக்குப் பந்துவாயிருக்க வேண்டுமோ?

ஜட்ஜ் :—என்ன அப்பா, நீ என்னையன்றோ கேள்விகள் போடுகிறாய்! நீ என்னென்ன பரீட்சையில் தேறியிருக்கிறாய்? ஏதாவது புஸ்தகம் எழுதியிருக்கிறாயோ?

பதில் :—என்னென்ன பரீட்சைகள் இந்த உத்யோகத்துக்குத் தேவை? என்னென்ன விதமான புத்தகங்கள் எழுதியிருக்க வேண்டுமோ அதையும் சொல்லுங்கள்.

ஜட்ஜ் :—(கோபத்துடன்) என்ன ஐயா, வம்பளக்கிறீர். கடிகாரத்தில் நிமிஷம் இரண்டாகி விட்டதே. உமக்கு முனிஸீப் வேலை வேண்டாமா?

பதில் :—எதற்காக இந்து வந்து லாட்டறி போடுகிறேன் என்று நினைத்திருக்கிறீர்கள்?

ஜட்ஜ் :—“சரி நீர் போய் வாலாம்” என்று தமிழில் சொன்னார்.

பதில் :—“இப்போது போகிறேன்! எப்போது வருவது?” என்று பல்லைக் காட்டிக் கொண்டே கேட்டேன்.

ஜட்ஜ் :—ஏதப்பா தொந்தரவாயிருக்கிறாய்!

பதில் :—முடிவான பதில் வேண்டும். நாளைக் கஞ்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வேறு வழிகளில் போகலாமென உத்தேசம். பிச்சையெடுக்கத் தெரியும். ‘வக்கீல்!’ என்று நெற்றியில் எழுதி ஒட்டிக் கொண்டு போர்டர் உத்தியோகம் செய்யப் போகிறேன். அல்லது ஒரு பத்திரிகையாவது ஆரம்பித்தாக வேண்டும். ஆகவே முடிவான பதில் வேண்டும்.

ஜட்ஜ் :—ஓய்! உம்மை லிஸ்டில் சேர்த்திருக்கிறது. உத்திரவு வரும்; தயாராயிரும்.

பதில் :—“தாங்ஸ் ஸார்! யுவர் லார்ட்ஷிப்” என்று நாஜூக்காக ஸலாம் செய்து வெளியே வந்தேன். பதினைந்து நிமிஷ நேரம் எனக்குப் பேட்டி கிடைத்ததற்குக் காரணமென்னவென்று நண்பர்கள் கேட்டனர். “முன்ஸீப் வேலை கிடைப்பதாயிருந்தால் ஆறுஸிலிண்டர் கார் வாங்க வேண்டும். அது நிச்சயம். வேலை கிடைக்காவிட்டால் வக்கீல் வேலை இல்லாது போகிறது என்பதாவது நிச்சயம்” என்று எனது முடிவை நண்பர்களுக்கு அறிவித்தேன்.

பிரபல ஜோதிடம்

இராஜாக்களாலும் பிரபுக்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர். ஒரு முறை பரீக்ஷியுங்கள். ஒரு வருஷ வாரப் பலன் எழுத ரூ. 7. மாத பலனுக்கு ரூ. 2 ஆரூடம் 5-கேள்விக்கு ரூ. 1. விவாக விஷயம் ரூ. 1. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரமாவது தேவை.

புதுச்சேரி, வி. தியாகராஜ பிள்ளை.
215, தங்கசாலை வீதி, சென்னை.

இடம், பொருள், எவல் எவ்வளவும் குன்றாத சடமெனும் புகையிலையை
சகல விதத்திலும் தெரிந்தெடுத்து ஏற்றமுறைப்படி முடித்து
தம்பயனும் நாடி தம்மால் வாங்குவோர் பயனும்

மிக நாடுவது எது?

மண்ணில் வாழ் மாந்தர் வாழ்க்கைக் கின்றியமையாததும்
யூகம், ஊக்கம் முதலியவை உபயோகிக்கும் போதெல்லாம்
மகிழ்ச்சி ஊட்டுவது அவரவர் தம் மனத்துயரை ஒட்டுவதும்

எங்கள்

தென் இந்தியா

பொடிக்களஞ்சியப் பொடியே

விலாசம் :—தேன் இந்தியா பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜியார்ஜ் டவுன், மதாராஸ்.
மானேஜர், உலகப் பிரசித்திப்பெற்ற
ஷண்முக முதலியார் பௌத்திரர் ஆர். கே. ஜெயராம் முதலியார்

TEETH TREATED SUPPLIED

7 AM. TO 12 NOON.

2. P.M. TO 6. P.M.

DR S. J. MORO.
DENTAL SURGEON.
3/256, CHINA BAZAAR. ROAD.
(OPP. TO FLOWER — BAZAAR POLICE STATION) MADRAS.

த்ரிமூலிகா தைலம்

உஷ்ணத்தினால் ஏற்படும் சகலவிதமான நோய்களுக்கும், கண்ணெரிச்சல், தலை கிருகிருப்பு, மண்டை இடி, குன்மம், இன்னும் பித்தத்தினால் ஏற்படும் சகல நோய்களையும் நிவர்த்தி செய்யும். இது ஓர் ஆபூர்வ சஞ்சீவித் தைலம். 8 அவுன்ஸ் புட்டி ரூ. 1-4-0.

லக்ஷ்மி மார்க்கு இயூகலிப்ட்ஸ் ஆயில் சுத்தமானது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் இன்றியமையாதது.

½ அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 1-2-0.
1 அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 1-14-0.
4 அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 5-10-0.
} பாக்கிங், தபால் பார்சல் செலவு வேறு.

கமலா அண்டு கோ.,
65, ராமசாமி தெருவு, ஜி. டி., மதறாஸ்.

அனந்த சக்தி

ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார் "கர்மயோகி"யில் எழுதியது :—

எறும்பு இறந்துபோன புழுவை இழுத்துச் செல்லுகிறது, எதனால்? சக்தியினால். தூமகேது அனேக லட்சம் யோசனை தூரமான தனது வாலை இழுத்துக் கொண்டு திசை வெளியில் மஹா வேகத்தோடு சுழலுகின்றது, எதனால்? சக்தியினால். அந்த தூமகேது எழுபத்தைந்து வருஷத்தில் ஒரு மண்டலமாகத் தன்னைச் சுற்றி வரும்படி சூரிய கோளம் நியமிக்கிறது, எதனால்? சக்தியினால்.

ஓர் கன்னிகை பாடுகிறாள். நெப்போலியன் ஐரோப்பாக் கண்டம் முழுமையும் வெல்லுகிறான். இவை இரண்டிற்கும் சக்தியே ஆதாரம். கண்ணுக்குப் புலப்படுவதும், ஊகத்திற்குப் புலப்படுவதுமாகிய வெளி யுலகம் கூட எல்லையற்றதென்று பண்டிதர்கள் கண்டிருக்கிறார்கள். இந்த எல்லையற்ற உலகத்தை இயக்கும் சக்தி தானும் எல்லையற்றதாகும். அநந்தமானது, அதனிலும் பெரிது இவ்வித சக்தியை மனிதன் பாவனை செய்வதால் பலவிதப் பயன்களுண்டு. "யத்பாவயவதி தத் பவதி"—எதனைப் பாவிக்கிறாயோ நீ அதுவாக ஆகின்றாய்.

ஆனால் இங்ஙனம் பாவனை செய்வது லேசான காரியமென்று நினைத்துவிடலாகாது. உயிர் ததும்பியதும் கனல்வதுமான சிரத்தையுடன் பாவனை செய்ய வேண்டும். பொறி பறக்கும் பக்தியுடன் தியானம் செய்யவேண்டும். இதனை வீண் கதையென்று நினைத்து விடவேண்டாம். விடாமல் அனுஷ்டானம் செய்து பார்த்தால் இதன் பயன் தெரியம்.

ஞானிகளென்றும் யோகிகளென்றும் சொல்லப்படுவோர், இந்த சக்தியை, மனதறிந்து சில முறைகளை அனுஷ்டித்து, பெறுகிறார்கள். சாமானிய ஜனங்கள் விஷயம் தெரியாமல் இயற்கை முறையிலே சிறிது, பெற்றவர்களாகின்றனர். சக்தி சிறிதும் இல்லாவிட்டால், ஒருவன் க்ஷண நேரங்கூட மூச்சு விட்டுக் கொண்டு இவ்வுலகத்தில் இருக்க முடியாது. வெளிக்காற்றிலே உலவி அத்துடன் யோகப்படுவதால் சக்தியுண்டாகிறது. சரீரத்தை உழைப்புக் குட்படுத்துவதால் இடை வெளியெங்கும் ததும்பிக் கிடக்கும் சக்தி அதனுள்ளே குடி கொள்ளுகிறது. அறிவைப் பல விஷயங்களிலே சிரத்தையுடன் செலுத்தி உழைப்பதினால் சக்தி யுண்டாகிறது. இங்ஙனம் சிறிது சிறிது ஏற்படும் சக்தியினாலேயே தான் உலகத்தில் மனிதர்கள் ஜீவித்திருக்கிறார்கள்.

தமிழ் ஜனங்களுக்குள் சக்தி மேன்மேலும் பெருகச் செய்ய வேண்டுமென்பது நமது நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாகவே நாம் உயிர் தரிக்கின்றோம். "மாதா! இந்த நாட்டு ஜனங்களுக்குச் சக்தி யதிரிக்கும்படி செய்க, அக்காரியத்தை நிறைவேற்றுதற்குரிய சக்தியை எனக் கருள் புரிக" என்று நம்மில் ஒவ்வொருவனும் தியானம் புரிய வேண்டும். ஆட்டம் ஆடுதல், கூத்து முதலியவை, மற்போர் முதலியவற்றிலே பழகுதல், பாடுதல், தர்க்கம், வாதம், தவம், பிரும்மசரியம், சுத்தம் முதலியவற்றால் ஓர் ஜாதிக்கு சக்தி அதிகப்படுகிறது. மனம், வாக்கு, செயல் மூன்றும் சுத்தமாக இருக்க வேண்டும். உள்ளும், புறமும் மாசில்லாது செய்யப் பழகவேண்டும். பயம், சந்தேகம், சலனம் மூன்றையும் வெறுக்கவேண்டும். இதனால் சக்தியேற்படும்.

புராதன ஸம்பிரதாய மென்பதால் மட்டுமே ஒன்று பொய்யாய்விட மாட்டாது; புதியதென்பதால் மாத்திரமே ஒன்றை மெய்யாகக் கொண்டு விடுதலும் பிழை. ஆராய்ந்து, அனுபவத்தால் பார்க்குமிடத்தேதான், ஒரு விஷயத்தின் மெய்மையும், பொய்மையும் விளங்கும். நமது முன்னோர்கள் "யோகம்" என்றதோர் மார்க்கம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இஃது ஹட யோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞான யோகம் என நான்கு வகைப்படும். இவற்றில் ஹடயோகந்தான் மிகக் குறைந்த பயன் தரக் கூடியது, மற்ற மூன்றிலும், அனந்த சக்திகள் பெறலாம். விஷயம் தெரியுமுன்பாகவே இதில் பயனென்ன விளையப் போகிறது என்று சந்தேகப் படுதல், தெளிந்தோர் செய்யும் காரியமன்று. அவற்றை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். அங்ஙனம் சாதனை செய்தவர்களுக்கு, பலவித அபூர்வ சக்திகளுண்டாயிருப்பதைக் கண்ணாரக் காண்கிறோம். நமக்கும் ஏன் அந்த சக்திகள் ஏற்படக் கூடாது? இந்த மூடத் தமோ குணத்தால் என்ன சுகங்கள் கண்டு விட்டோம்? சோம்பராலும் அற்ப விஷயங்களிலே ஆசை கொண்டு மனதைக் கடலில் அகப்பட்ட துரும்பு போலச் சலிக்க விடுவதாலும், என்ன பேறுகள் பெற்று விட்டோம்?

துணிவு, உள்ளத் தூய்மை, ஏதாவதொரு மகத்தான லட்சியத்திலே, அறிவை ஆணி கொண்டடித்தது போலப் பற்றுறச் செய்து கொள்ளுதல், லாப நஷ்டங்களிலே சிந்தனை இல்லாமை— இவைதான் யோகத்தின் இரகசியம்.

ஸ்வதேசியை ஆதரியுங்கள்
கள்ளிக்கோட்டை விஜிடபில் சோப் ஒர்க்ஸில்
தயார் செய்த மேன்மையான வாசனையுள்ள

மலபார் {
லிலி ரோஸ் சோப்
சந்தன சோப்
விம்டா சோப்
(நீம்-வேப்)
டர்கிஷ் பாத் சோப்

இந்த டாய்லட் சோப்புகள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியதவசியம். ஆரோக்கியத்திற்கும் தேக சவுக்கியத்திற்கும் இவையே முதன்மையானவை.

எமது முக்கியமான சலவை சோப்புகள் :—
மலபார் சோப் & நீலம் (இண்டிகோ) சோப்
நெ. 101. குஜராத் சோப்
எல்லா விடங்களிலும் கிடைக்கும்.

Props : சேட் நாக்ஜீ புருஷோத்தம் & கோ.
(OF SUN BRAND UMBRELLA FAME)
247, சைனாபஜார் ரோட், மதராஸ். (H. O, கள்ளிக்கோட்டை)

தெருத் திண்ணை (B. S. சங்கரன் எழுதியது)

பலரின் உழைப்பினுல் வரும் ஊதியத்தைக் கொண்டு சிலர் பிழைக்கும் முதலாளி நாகரிகமாகிய தந்தைக்கும், மூடப் பழக்க வழக்கமென்ற தாய்க்கும் பிறப்பது திண்ணைப் பேச்சு. வேலை ஒன்றும் செய்யாமல் உண்டு காலம் கழிப்பதைக் கௌரவமாக நினைக்கும் மஹா ஜனங்களின் பிரசங்க மேடை திண்ணை தான். இங்கு வந்து அடிபடாத விஷயமில்லை. இவர்கள் வையாத தலைவர்களில்லை. குத்தகை வாங்கி வயிறு வளர்க்கும் மிராசுதார்கள் அங்கு பேசும் பேச்சு ஒருபுறமிருக்கட்டும். இவர்களின் தெருத் திண்ணை வம்பு ருசிக்காது, "இல்லை; இல்லை" என்ற பல்லவி ஒரு பக்கம். உழவர் கட்சி வரவர ஓங்கி வருவதைக் கண்டு பயம் ஒரு பக்கம். உலக மாறுதலைக் கண்டு வெறுப்பு ஒரு பக்கம். திண்ணை வம்பர்கள் நிலை பரிதபிக்கத் தக்கதுதான்.

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்"

என்று பாரதியார் பாடியதை அந்தக் காலத்திலேயே அறிந்துகொண்டு கண் விழித்துக் கொண்டிருந்தால் இவ்வளவுக்கு வந்திராதே!

நான் இப்பொழுது உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் போவது இந்த முதலாளிச் சோம்பேறிகளை அல்ல. நிலம்புலமோ, வியாபாரமோ இல்லாமல், சுகஜீவிகளாய் வாழும் ஓர் இனத்தார் இருக்கிறார்கள். உலகப் பொருளாதார நெருக்கடி இவர்கள் இருக்கிற பக்கங்கூடத் தலைக்காட்டுவது இல்லை. 16 பென்ஸ் விகிதமா, 18 பென்ஸ் விகிதமா என்கிற தலைவலி எடுக்கிற விஷயம் இவர்களைப் பாதிப்பதில்லை. வெள்ளச் சேதம் இவர்களை ஒன்றும் செய்யமுடியாது. 'கொடுத்து வைத்த மகராஜர்கள்' என்று எங்கள் பாட்டி அடிக்கடி குறிப்பிடுகிறுளே, அது இவர்களைத் தான். கவலையற்ற புருஷர்கள். யதா பூர்விக் கொள்கையைப் பிரசாரம் செய்துகொண்டு பொழுது போக்கி வருகிறார்கள். இவர்களிடம் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசினுல் மட்டும் சிம்ம சொப்பனம். "சீர்திருத்தம்" என்று ஒரு வார்த்தையைப் போடுங்கள்; "அப்பா!" என்று பெருமூச்சுக் கிளம்பிவிடும். வயிற்றில் அடிக்கிற விஷயமல்லவா? "எண்ணத்திற்குப் பயப்படுவதுபோல் மனிதன் வேறு எதற்கும் பயப்படுவதில்லை" என்கிருர் ரஸ்ஸல். எண்ணம் செய்கையாகி, செய்கை சோம்பேறிகளைத் தொலைக்கக் கிளம்பி விட்டால் இவர்களின் கதி என்ன? பயப்படுவதற்குக் காரணம் இப்பொழுது விளங்குகிறதா?

திண்ணை மகான்களை வையவேண்டுமென்று இக்கட்டுரையை எழுதவில்லை. திண்ணை என்று குறிப்பிட்டால், அது முதலாளிகள் கூடும் சத்திரம், கணக்குப்பிள்ளை சாவடி, சீட்டாடும் மூலைமேடு எல்லாவற்றையும் அதோடு சேர்த்துக் கொள்ளுங்கள். பிரம்மாவின் சிருஷ்டிக்கு ஆயுள் 100; முதலாளி நாகரிகத்தின் சிருஷ்டிகளாகிய சத்திரம், சாவடி, சோம்பேறி மடம், தெருத் திண்ணை முதலியவற்றிற்கு ஆயுள், யுகாந்திரம் போலும்!

தெருத் திண்ணைப் பேச்சு, தனது அரசாட்சியை எவ்வளவு காலமாக நடத்தி வருகிறது தெரியுமா? அதற்குள்ள வலிமை எவ்வளவு தெரியுமா? அயோத்தியின் தெருத் திண்ணையிலே சீதையைப் பற்றி வம்பளந்தார்கள். சக்கரவர்த்தி இராமன் பயந்துபோய் அவளைக் காட்டிற்கனுப்பினன். அன்று ஆரம்பித்த தெருத் திண்ணை வம்பு, அதற்கப்புறம் நடந்த மஹா பாரதப் போர், F-ரெஞ்சுப் புரட்சி, ஐரோப்பிய மஹா யுத்தம் முதலியவைகளுக்கெல்லாம் தப்பி, பழம் தமிழாசிரியர்கள் சொல்வதுபோல் நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக வளர்ந்து இன்றைக்குக் காந்திஜியை வைகிற கட்டத்திற்கு வந்திருக்கிறது. தெருத் திண்ணைப் பேச்சைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்போமா? பொழுது போக்காக இருக்கும். கொஞ்சம் மாதிரி பார்ப்போம்.

"மொச்சைக் கொட்டை விலை விழுந்துவிட்டது; காரணம் காந்தி. முக்காதுட்டுக் கார்டு முக்காலணுவாகி விட்டது; காரணம் அந்த காந்தி. வாய் திறந்தறியாத பள்ளனும் பறையனும் உரிமை வேண்டுமென்கிருர்கள்; காரணம் காந்தி. காலம் கெட்டுப் போச்சு.... ...." என்று அடுக்கிக் கொண்டே போகிருர் ஓர் சகல கலா வல்லவர். நாய்க்குத் தேகத்தில் எந்த இடத்தில் அடி பட்டாலும் அது தன் காலையே தூக்கிக்கொண்டு ஓடும். அந்த ரகத்தைச் சேர்ந்த பேர்வழி இவர். இவருடைய அகராதியில் "காலங் கெட்டுப் போச்சு" என்கிற வார்த்தைகளைத் தவிர, வேறு கிடையாது. காலம் கெடவில்லை. நாம்தான் காலத்தைக் கெடுத்துவிட்டோம். ஊரை ஏமாற்றி எத்தனை நாள்தான் பிழைக்க முடியும்?

"ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை! ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப
திந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வமெய்தி
மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர்
ஸமானமாக வாழ்வமே"

என்று கவி பாடினர். "பித்தம் தலைக்கேறியவன் புலவன்" என்று இகழ்ச்சியாகப் பேசித் தங்கள் காரியத்திலேயே கண்ணு யிருந்தார்கள். காந்தி வந்தார்; இருட்டு ஒழிந்தது, பிரகாசம் பெருகுகிறது. "இருட்டில்தான் இருப்பேன்" என்ருல், எவ்வளவு காலத்திற்கு முடியும்?

'சொத்துரிமை' என்ற முகமூடிக்குள் நுழைந்துகொண்டு ஏழைகளின் உழைப்பினுல் உண்டு உயிர் வாழும் முதலாளி நாகரிகமே! மஹரிஷிகளால் மனிதவர்க்கம் உய்யும்பொருட்டு அளிக்கப்பட்ட வேதங்களையும் சாஸ்திரங்களையும் சுயநலம் காரணமாகத் தவருன வியாக்கியானம் செய்து தீண்டாமையைச் சிருஷ்டித்த குள்ள அறிவே! உங்கள் வாழ்வு அழியும் காலம் கிட்டி விட்டது. நீங்கள் மூட்டிய தீ உங்களையே எரித்துச் சாம்பலாக்கப்போகிறது.

"எல்லோரு மொன்றென்னும்
காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றுந் தொலைகின்ற
காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும்
காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு
நாசம் வந்ததே"

என்ற சுதந்திரப் பள்ளு உச்சஸ்வரத்தில் பாடப்படுவதைத் திண்ணைகள் கேட்கட்டும்.

குழந்தைகள் ஆசை

“ஒரு நாளைக்காவது வெளியே அழைத்துக் கொண்டு போக மாட்டேன் என்கிறாளே அம்மா. எனக்கு மட்டும் ஒரு கை வண்டி யிருந்தால் அவளை அதில் உட்கார வைத்து சாயங்காலம் தள்ளிக் கொண்டு போவேன்” என்று எண்ணுகிறது ஒரு குழந்தை.

“விளையாடுவதற்கு ஒரு பொம்மை கிடையாதா? இதென்ன அநியாயம்! அம்மாவுக்கு விளையாட, பாத்திரங்கள் அடுப்பு எல்லாம் இருக்கிறது. அப்பாவுக்கு விளையாட, அலமாரி, மேஜை எல்லாம் இருக்கிறது. என்னை எடுத்தும் விளையாடுகிறார்கள். ஆனால் எனக்கு மட்டும் விளையாட ஒன்றுமே யில்லையா? எனக்கு எப்படியாவது சில பொம்மைகள் கிடைத்தால் இந்தக் கிழங்களுக்குத் தாராளமாகக் கொடுத்து விளையாடச் செய்வேன்” என்று நினைக்கிறது இன்னொரு குழந்தை.

“பூதம் மாதிரி இருக்கிறாரே இந்த டாக்டர்; எதை எதையோ என் வாயில் திணித்து விட்டு அப்பாவிடம் காசு பறித்துக் கொண்டு போய் விடுகிறாரே இவர். என்றைக்காவது ஒரு நாள் இந்த டாக்டரைப் படுக்கையில் போட்டுப் புட்டி புட்டியாக மருந்தைப் போட்ட வேண்டுமென்று எனக்கு ஆசையாயிருக்கு” என்று எண்ணுகிறது இன்னொரு குழந்தை.

“வாத்தியார் இருக்கிறாரே அவர் ஒரு பிசாசு. எதற்கும் பிரம்பைத் தூக்குகிறார். ஒரு நாளைக்காவது அந்த நாற்காலியில் உட்கார்ந்து இந்த வாத்யாரை ஒரு போடு போட வேண்டுமென்று எனக்கு ஆசையா யிருக்கிறது” என்கிறான் வேறொரு சிறுவன்.

மான நஷ்டம்

(" மாயா " எழுதியது.)

என்னைப் போன்ற ஒரு பரம தரித்திரனை, திடீரென்று "கொண்டா ஐம்பதினாயிர ரூபாயை" என்று, கௌரவமான முறையில், பிரபுக்கள் பலர் நாலா திக்கிலும் சூழ்ந்து கொண்டு கேட்டால், ஏன் அவனுக்குச் சந்தோஷம் வராது என்று கேட்கிறேன். ஒரு பெரிய பணக்கார சமூகம் முழுவதும் எனக்கு விரோதியாகி, தங்களுடைய மானத்தில் 50 ஆயிரம் ரூபாய் பெறும்படியான ஒரு பகுதியை நான் அடித்துக் கொண்டுபோய் விட்டதாக, ஒன்றுக்குப் பின் ஒன்றாகப் பல கடிதங்கள் என்னிடம் வந்து குவியலாயின. விஷயம் என்ன என்று கேட்கிறீர்கள். பத்திரிகைக்கு எழுதிய ஒரு நேர்த்தியான சிறு கதையில், வாசகர் பரிதாபத்தையும் அன்பையும் ஒரே யடியாய் அள்ளிவிடக் கூடிய கதாபாத்திரமென்று நினைத்து ஒரு ஆளை நுழையவிட்டேன். என் கதைக்குள் அந்தப் பேர்வழி பிரவேசித்ததால், தங்கள் சமூகத்தின் 50 ஆயிர ரூபாய் மானம் குறைந்து விட்டது என்பது இந்தப் பிரபுக்களின் கட்சி. என்னிடம் மாத்திரம் போதிய பணம் இருந்தால், இந்த 50 ஆயிர ரூபாயை உடனே தந்தி மணியார்டர் செய்து விட்டு, இன்னும் பல 50 ஆயிரப் பண முடிச்சுகளையும் எடுத்து வைத்து, பேனாவை மும்முரமாக ஓட்டியிருப்பேன். ஏனென்றால், எனக்கு அவ்வளவு சந்தோஷம். என்னுடைய கற்பனையில் தோன்றிய ஒரே ஒரு ஆள் 50 ஆயிரம் ரூபாய் பெறுமானமுடையவனாயிருந்தால், என்னுடைய முழுக் கதையும் எவ்வளவு பெறுமானமுடையதாயிருந்திருக்க வேண்டும்? இதை நினைத்த பொழுதுதான் எனக்குக் கொஞ்சம் வருத்தமாயிருந்தது. அந்த "மோசக்கார"ப் பத்திராதிபர் எனக்கு அந்தக் கதைக்காக ஐந்தே ஐந்து ரூபாய்தான் கொடுத்தார்.

சில வருடங்களுக்கு முன் நான் ஒரு பிரபல பத்திரிகைக்குச் செய்தி ஒன்று அனுப்பினேன். எனது வாசகத்தை முதலில் படியுங்கள் :—

"திம்மப்ப செட்டியார் வீட்டில், கம்மப்பன் என்ற போக்கிரி, திருட்டுத் தனமாய்ப் புகுந்து, குழந்தை சுப்பம்மாளைக் கொலை செய்து, அவளுடைய கொப்பு, காப்பு முதலிய நகைகளைக் களவாடிப் போனான்."

பத்திராதிபர் திருத்தப் பதிப்பாவது :-

"திம்மப்ப செட்டியார் என்பவர் வீட்டில், போக்கிரி என்று கருதப்படுவதாகச் சொல்லப்படும் கம்மப்பன் என்று நினைக்கப்படும் ஒருவன் குழந்தை யென்று பிரஸ்தாபிக்கப்படும் சுப்பம்மாள் என்பவளைக் கொலை செய்ததாகவும், அவளுடைய கொப்பு, காப்பு என்று ஊகிக்கப்படுவதான நகைகளைக் களவாடிச் சென்றதாகவும் பேசப்படுகிறது."

ஆஹா! ஆசிரியர் எவ்வளவு மான நஷ்ட தாவாக்களிலிருந்து நம்மைக் காப்பாற்றி விட்டார் என்பதை நினைத்து நான் அதியாச்சரியமடைந்து விட்டேன். எல்லாவற்றையும் விட, குழந்தை, கொப்பு, காப்பு என்று நினைக்கப்படும் இந்த மூன்று பெரியார்களும் எந்தக் கோர்ட்டுக்குப் போனாலும் நம்மை அசைக்க முடியாதல்லவா?

"மான நஷ்ட"த்திற்கு இன்னும் சில கவசங்கள் இருக்கின்றன. "நீர் பொய்யன்" என்றால், அவதூறாகும். "நீர் இப்பொழுது சொன்னது பொய்" என்றால், இதில் அவதூறு வழக்குக்கு "காஸ்" ஏற்பட்டு விடுகிறது; ஆனால், அவதூறு அல்லவா என்பதைக் கோர்ட்டாரே தீர்மானிக்க வேண்டும். "நீர் இப்பொழுது சொன்னது உண்மையில்லைப் போல எனக்குத் தோன்றுகிறது" என்றால், இதில் உமது மானம் துளிக்கூடப் போனதாக, நீர் சொல்ல முடியாது; சொன்னாலும் பலிக்காது. "கேஸ்" போட்டீரானால், எனக்கு நீர் மான நஷ்டம் விளைத்ததாக உம்மிடமிருந்து நான் பணம் தட்டிவிடுவேன்.

ஒரு சமயம் ஓர் பிரபல செட்டியாரைத் திட்டவேண்டியிருக்கிறது. இன்னொரு சமயம் காந்திஜியை நையாண்டியாக எழுதவேண்டியிருக்கிறது. இப்படி அடிக்கடி ஏதாவது எழுதிக் கொண்டிருந்தால்தான் பத்திரிகை விற்பனையாகிறது. எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ? திடீரென்று யாராவது மான நஷ்ட தாவாப் போட்டு விட்டாலென்ன செய்வது? ஆகவே எல்லாவற்றிற்கும் ஒரே கவசமாக "நமது பத்திரிகையில் வெளியாகும் சகல கட்டுரைகளிலும் கதைகளிலும் காணப் படும் எல்லாப் பெயர்களும் கற்பனைப் பெயர்கள். அவை யாரையும் குறிப்பிடவில்லை" என்று பத்திரிகை அட்டையிலேயே அச்சடித்து விட்டால் போதுமென்று ஓர் பத்திராதிபர் சொல்கின்றார். ஆனால் சட்டம் அறிந்த ஒருவர் அது போதுமானதன்று என்று கூறுகிறார். ஆகவே என்ன செய்வதென்று என்னைக் கேட்கிறீர்கள். சரி, சொல்கிறேன்.

உங்கள் நெற்றி, அச்சாபீஸ் கட்டடத்தின் நாலு திசை, பத்திரிகையின் அட்டை இந்த எல்லா இடத்திலும் பின்வரும் ஒரு பெரிய விளம்பரத்தைப் போட்டு விடுங்கள் :—

"இந்த இடத்தில் உதயமாவதெல்லாம் வெறும், சுத்த, கலப்பில்லாத கற்பனையேயாகும்; கோர்ட்டிலோ வெளியிலோ, காலையிலோ மாலையிலோ, இரவிலோ பகலிலோ, எங்கே எப்பொழுது எப்படி யார் படித்தாலும், எந்தப் பொருளையும் ஜீவனையும் மனிதரையும் வகுப்பையும் குறிப்பிடுவன அல்ல இங்கு உதயமாகி வெளியே வந்த விஷயங்கள். மேலும், எங்கள் பத்திரிகையில் உள்ள வாக்கியம் ஒவ்வொன்றிலும், அதன் ஒவ்வொரு பெயர்ச் சொல்லுக்குப் பிறகும், 'ஆம்' என்றோ, 'சொல்லப்படும்' என்றோ, 'என்பதாக வதந்தி' என்றோ சேர்த்துப் படித்துக் கொள்ளவும். ஏதாவது அவதூறு என்று எந்த ஜீவனுக்கோ, கோர்ட்டாருக்கோ தோன்றுமானால், அப்படிப்பட்ட அபிப்பிராயம், சட்ட பூர்வமாகவும் சரி வேறு எந்த விதத்திலும் சரி, எங்களைக் கட்டுப் படுத்தாது எனத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அன்றியும், நாங்களும் எங்கள் பத்திரிகையுமே வெறுங் கற்பனை என்பதையும் நாங்கள் யாரையும் எதையும் குறிப்பிடவில்லை யென்பதையும் கண்டிப்பாக அறிவித்துக் கொள்ளுகிறோம்."

இப்பேர்ப்பட்ட "ராவணன் கோட்டை"யை நீங்கள் கட்டிக் கொண்ட பிறகு, யாரிடம் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் உங்கள் சொல்லம்புகளைச் சரிமாரியாகப் பொழியலாம். ஆனால், இந்த யோசனைப்படி பூர்த்தியாக நடந்தும் நீங்கள் ஏதாவது மான நஷ்ட வழக்கில் சிக்கிவிடுவீர்களானால், அதனால் ஏற்படக்கூடிய எவ்விதக் கஷ்ட நஷ்டங்களுக்கும் சுக துக்கங்களுக்கும் நான் எவ்விதத்திலும் பொறுப்பாளியாகமாட்டேன் என்பதையும் அறியவும்.

ருஷிய ஞானி டால்ஸ்டாய்

எழுதிய

கொலையாளிக்குப் பென்ஷன்!

ஓர் சிறு கதை

(“கஸ்தூரி” மொழி பெயர்த்தது.)

பிரான்ஸ், இத்தாலி இந்நாடுகளின் எல்லைப்புரத்தில், மத்திய தரைக் கடலோரமாக மொராக்கோ என்ற எட்டே சதுர மைல் விஸ்தீரணமுள்ள சிறிய நாடு ஒன்றிருக்கிறது. நமது கதை நிகழும்போது இந்த நாட்டு மக்கள் ஏழாயிரம் பேர்தான். (இப்பொழுது 23 ஆயிரம் பேர்.) ஆயினும் இதற்கு ஒரு ராஜா உண்டு; அவருக்கு ஒரு அரண்மனையுண்டு; மந்திரி பிரதானிகள் உண்டு; சேனை, சேனைத் தலைவர் முதலிய யாவரும் உண்டு. சேனை, பெரிய சேனையல்ல; மொத்தம் அறுபது போர்வீரர்கள்தான். இருந்தாலும் அது ‘சேனை’தான். மற்ற நாடுகளைப் போல அந்த நாட்டிலும் குடிகளுக்கு வரியுண்டு.

சில ஆண்டுகளுக்கு முன் இந்தக் குட்டி நாட்டிலே ஒரு கொலை நடந்தது. இந்த நாட்டுக் குடிகள் மிகவும் அமைதியானவர்கள்; இதுவரை அங்கு கொலை நிகழ்ந்ததே கிடையாது; அது பற்றிய வழக்குகளுமில்லை. நீதிபதிகள் ஒன்று கூடினார்கள்; கொலையைப் பற்றி விசாரித்தார்கள். வக்கீல்கள், ஜூரிகள், சாட்சிகள் யாவரும் வந்திருந்தனர். கடைசியில் எதிரி குற்றவாளி எனத் தீர்ப்பாயிற்று. ஆகவே சட்டப்படி அவன் தலையை வெட்டி விடுவதென நீதிபதிகள் முடிவு செய்தனர். இந்த முடிவை அவர்கள் அரசருக் கறிவித்தனர். அரசனும் அதை உறுதிப்படுத்தினன்.

ஆனால், ஒரு சங்கடம் ஏற்பட்டது. தலை வெட்டும் இயந்திரம் அந்த நாட்டில் இல்லை. மந்திரிகள் சிந்தித்தனர். பிரெஞ்சுத் துரைத்தனத்துக்கு எழுதி, “ஒரு தலை வெட்டும் இயந்திரமும், அதில் வேலை செய்ய ஒரு ஆளும் அனுப்பமுடியுமா? அதற்கு என்ன செலவாகும்?” என்று கேட்டார்கள். “இயந்திரமும், ஆளும் அனுப்ப முடியும்; அதற்குப் பதினாயிரம் பிராங்குகள் செலவாகும்” என்று ஒரு வாரத்தில் பதில் வந்தது. அமைச்சர்கள் இச் செய்தியை அரசனுக் கறிவித்தார்கள். அவர் யோசனை செய்தார். “பதினாயிரம் பிராங்குகள்! இந்தப் பயலுக்காக இவ்வளவு செலவா? பதினாயிரம் பிராங்குகள் என்றால், நமது குடிகளில் தலைக்கு 2 பிராங்குக்கு மேலாகிறது. குடிகள் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். கலகம் ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும். வேறு வழியில், குறைந்த செலவில் இந்த வேலையைச் செய்ய முடியாதா?” என்று ராஜா கேட்டார்.

மந்திரி பிரதானிகள் மீண்டும் கூடினர். இத்தாலி நாட்டு மன்னருக்கு எழுதிக் கேட்கலாமென முடிவு செய்தார்கள். இத்தாலி மன்னர் அடுத்த நாட்டரசர். அவர் மூலியமாகச் சகாயமாய்க் காரியத்தை முடித்துக் கொள்ளலாமெனக் கருதி, அவருக்கெழுதினர்.

தலைவெட்டும் இயந்திரமும், அதற்குத் தக்கதோர் ஆளும் அனுப்புவதாகவும், அதற்குச் சகல செலவுகளும் சேர்ந்து ஈராயிரம் ஆகுமென்றும் இத்தாலியிலிருந்து பதில் வந்தது. “இது பிரான்சு சொன்னதை விடச் சகாயம்தான்; ஆனால் இதுவும் நம் சக்திக்கு அதிகமேயாகும்” என்று மொராக்கோ அரசாங்கம் கருதியது. அந்தப் பயலுக்காக அவ்வளவு பணத்தைச் செலவிடலாமா? எனவே, மீண்டும் மந்திரி சபை கூடிற்று. “நமது போர் வீரர்களில் ஒருவனைக் கொண்டு ஏன் இந்த வேலையை முடித்து விடலாகாது?” என்ற யோசனை பிறந்தது. உடனே சேனாதிபதியை அழைத்தார்கள். “இந்தக் குற்றவாளியின் தலையை வெட்டுவதற்கு நமது போர்வீரர்களில் ஒருவன் கிடைக்கமாட்டானா? சண்டையில் எத்தனை எத்தனையோ பேர்களைக் கொன்று தள்ளுகிறார்களே. போர்வீரர் வேலையே அதுதானே?” என்று கேட்டார்கள். சேனைத்தலைவன் போர் வீரர்களுடன் கலந்து பேசினான்; ஆனால் ஒருவனும் அக்காரியத்தைச் செய்ய, முன் வரவில்லை. “அதைச் செய்ய எங்களுக்குத் தெரியாது; எங்களுக்கு யாரும், எப்பொழுதும் கற்றுக் கொடுக்கவில்லை” என்று அவர்கள் கூறிவிட்டார்கள்.

சரி, திரும்பவும் மந்திரிகள் ஒன்று கூடி, ஆலோசித்து, பஞ்சாயத்தாரை நியமித்தனர். எல்லோரும் பல நாள் ஆழ்ந்து யோசித்து, கடைசியில் குற்றவாளியின் மரணதண்டனையை ஆயுள் பரியந்தம் சிறை வாசமாக மாற்றிவிடுவதெனத் தீர்மானித்தார்கள். அரசரும் கொலையாளிமீது கருணை கொண்டு, அசல் தீர்ப்பை இவ்வாறே மாற்றினார். விஷயம் ஒருவாறு முடிந்தது என்று எல்லாரும் சந்தோஷிக்கலாயினர். ஒரு தகுதியான இடத்தைக் கண்டு பிடித்து, அதில் அந்த வாலிபனைப் போட்டு அடைத்து, ஒரு காவற்காரனையும் நியமித்தனர். கைதி தப்பி ஓடாமல் பார்த்துக் கொள்வதுடன், அரண்மனையிலிருந்து அவனுக்கு உணவு கொண்டு வந்து கொடுப்பதும் அவனது வேலை.

சில மாதங்கள் கழிந்தன; பிறகு, ஒரு வருஷம் ஆயிற்று; வருஷ இறுதியில் அரசர், அரசாங்கக் கணக்குகளைப் பரிசோதித்துப் பார்த்தார். செலவில் ஒரு புதிய இனம் ஏற்பட்டிருப்பதைக் கவனித்தார். அது கைதிக்காக ஏற்பட்ட செலவு; அது பெருஞ் செலவாயிருந்தது. “கைதிக்குச் சாப்பாடு போடவேண்டியதாயிருக்கிறது. இதற்கு வருஷத்தில் அறுநூறு பிராங்குக்கு மேலாகிறது. மேலும் குற்றவாளி கிழவனுமல்ல. நல்ல வாலிபன்; உடலுறுதி வாய்ந்தவன்; இன்னும் ஐம்பதாண்டுகளுக்குக் குறையாமல் வாழ்ந்திருக்கக் கூடியவனாக விருக்கிறான். அதுவரையில் வருஷா வருஷம் அவனுக்காக அறுநூறு பிராங்குகள் செலவிட்டு வந்தால், அப்பப்பா, கணக்கு எவ்வளவுக்கோ ஓடிப் போகிறதே!” என்று இவ்வாறெல்லாம் வேந்தன் யோசித்து, மந்திரிகளை அழைத்தான்.

“இந்தப் பயல் விஷயத்தில் செலவுகளைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்; இப்பொழுது ரொம்பச் செலவாகிறது” என்றான் அரசன். மந்திரி

கள் கூடிப் பேசினார்கள். "காவல்காரனை நீக்கி விடுவோம்" என்று ஒருவர் சொன்னார். "அப்படியானால், அந்தப் பயல் ஓடிவிடுவானே" என்றார் இன்னொருவர். "ஓடிப் போனால் போகட்டும், தொலையட்டும்" என்றார் முதல் மந்திரி. உடனே அவர்கள் தங்கள் முடிவை அரசனுக்குத் தெரிவித்தார்கள். அரசனும் அதனை ஏற்றுக் கொண்டான். உடனே காவல்காரன் நீக்கப்பட்டான்; என்ன வாகிறதென்று பார்த்தார்கள் மந்திரிகள். சாப்பாட்டு வேளைக்குக் கைதி வெளியே வந்தான். காவலாளியைக் காணாமல், தனது சாப்பாட்டை வாங்கி வருவதற்காக, தானே அரண்மனைக்குச் சென்றான். அங்கு கொடுக்கப்பட்ட உணவை வாங்கி வந்து, சாப்பிட்டுவிட்டு, கதவைத் தானே அடைத்துக் கொண்டு, படுத்துக் கொண்டான். மறுநாளும் இவ்வாறே செய்தான். இப்படியே பல தினங்கள கழிந்தன. அவன் ஓடிப்போகிற குறிகள் ஒன்றும் காணப்படவில்லை; என்ன செய்வது?

திரும்பவும் மந்திரிகள் சந்தித்தார்கள். "அவனிடம் நேரே விஷயத்தைச் சொல்லிவிட வேண்டும்; அவன் இனி அங்கே இருக்க வேண்டியதில்லை என்று தெரிவித்து விடலாம்" என முடிவு செய்தனர். உடனே நீதி இலாகா மந்திரி அவனைச் சிறைச்சாலையிலிருந்து வரவழைத்தார். "நீ ஏன் ஓடிப் போகவில்லை? உன்னை வைத்துப் பாதுகாக்க, காவற்காரனில்லை; நீ எங்கே வேண்டுமானாலும் போகலாம்; அரசர் ஒன்றும் செய்ய மாட்டார்" என்று அவனிடம் சொன்னார்.

கொலையாளி கூறியதாவது:—"நான் ஓடிப்போனால் அரசர் ஒன்றும் செய்ய மாட்டார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் போகிறதற்கு ஒரு இடமுமில்லை. என்ன செய்கிறது? நீங்கள் எனக்குத் தண்டனை விதித்ததால் இனி ஜனங்கள் என்னை மதிக்க மாட்டார்கள். மேலும், இனி நான் வேலை செய்து பிழைக்கமுடியாது. தொழிலையும் மறந்து விட்டேன். நீங்கள் எனக்கு அநியாயம் புரிந்திருக்கிறீர்கள்; இது நீதியல்ல. ஆதியிலே எனக்கு மரண தண்டனை விதித்தபொழுது, அதனை நீங்கள் நிறைவேற்றி யிருக்கவேண்டும்; ஆனால் நீங்கள் அவ்வாறு செய்யவில்லை. அது ஒரு அநீதி. பின்பு நீங்கள் எனக்கு ஆயுள் பரியந்தம் சிறைவாசத் தண்டனை விதித்து, என்னைக் காவல் காக்கவும், அரண்மனையிலிருந்து சாப்பாடு கொண்டு வரவும் ஒரு ஆளை நியமித்தீர்கள். சிறிது காலங் கழித்து அவனையும் நீக்கிவிட்டீர்கள். நானே எனக்குச் சாப்பாடு கொண்டு வர வேண்டியதாயிற்று. அதற்கும் நான் குறைகூறவில்லை. ஆனால் இப்பொழுது என்னை வெளியே போய்விடச் சொல்லுகிறீர்கள்? இதற்கு நான் சம்மதிக்க முடியாது. நீங்கள் உங்களிஷ்டம்போல் செய்யுங்கள்; ஆனால் நான் வெளியே போகமாட்டேன்."

என்ன செய்வது? மீண்டும் சங்கடம்; திரும்பவும் மந்திரிகளின் கூட்டம்; யோசனை. "கைதியோ வெளியே போக மாட்டேன் என்கிறான்; இந்நிலைமையில் என்ன செய்வது? அவனுக்குப் பென்ஷன் கொடுத்துவிடுவதை விட வேறு வழியில்லை" என்று தீர்மானித்த மந்திரிகள், அதை அரசனுக்கறிவித்தார்கள். அறுநூறு பிராங்குகள் கொடுப்பதென முடிவாயிற்று; கைதிக்குத் தகவலறிவிக்கப் பட்டது.

"நல்லது; நீங்கள் இந்தத் தொகையை ஒழுங்காகக் கொடுக்கும் வரையில் எனக்கு ஆட்சேபமில்லை; இந்த நிபந்தனையின்மீது நான் வெளியே போகத் தயாராக விருக்கிறேன்" என்றான் கொலையாளிக் கைதி.

ஒரு வருஷப் பென்ஷனில் மூன்றிலொரு பங்கை முதலிலேயே அவனுக்குக் கொடுத்துவிட்டார்கள்; கைதியும் நாட்டை விட்டுப் புறப்பட்டான். ரயில் வண்டியில் ஒரு நாழிகைப் பயணத்துக்கப்பாலுள்ள ஒரு ஊருக்குப் போய், மொராக்கோ நாட்டு எல்லைப் புறத்திலேயே அவன் குடியேறினான். ஒரு சிறிய நிலம் வாங்கி, காய், கறித் தோட்டமொன்று போட்டான். காய் கறிகளைச் சந்தைக்கு எடுத்துக் கொண்டு போய் விற்று, நல்ல ஜீவனம் நடத்தி வந்தான்.

வேறு நாடாயிருந்தால் எப்படியாவது அவன் தலையை வாங்கியேயிருப்பார்கள்; அல்லது குடிகளின் பணம் வீணாவதைப் பொருட் படுத்தாமல் ஆயுள் பரியந்தம் சிறைச்சாலையிலேயே போட்டிருப்பார்கள்; அத்தகைய நாட்டிலே அவன் பிறந்து, குற்றஞ் செய்யாமல் போனது நல்ல காலம் என்றுதானே சொல்லவேண்டும்?

வர்ண விஸ்தாரம்

ஆகாயத்தில் மேகங்களின் ஜோடிப்பினால் ஏற்படும் வர்ண பேதங்களும், வான வில் விழும்போது தெரியும் ரங்குகளும் எந்தக் கண்ணைத்தான் கவர்ச்சி செய்யாது? தான் அனுபவித்த காட்சியின்பத்தை அப்படியே எழுத்துக்களில் தந்துவிடுவான் கவி; ஓவியத்தில் தந்துவிடுவான் சித்திரக்காரன்.

அக்நி தேவன் ஏழு வர்ண நாவு படைத்தவன் என்றும், மேக மண்டல இறைவனாகவும், விளை பொருள்களின் கர்த்தாவாகவும் கூறப்பட்ட இந்திரன் 'இளம் நீல' வர்ணன் என்றும் ரிக் வேதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. வருணன் மஞ்சள் நிறக் கைகளையுடையவனென ஓர் ரிஷி இசைத்துச் சென்றார்.

ஆர்யா வர்த்தத்தின் கவிகள் ஆதி காலந்தொட்டு ஓர் முறையைக் கையாண்டு வந்திருக்கின்றனர். மனிதனின் அந்தராத்மாவை, சூக்ஷ்ம சக்தியை ஸ்தூலமான பொருள்களோடு இணைத்துப் பாடுவதில் நமது கவிஞர்களுக்கு ஓர் திருப்தி. மனதின் உணர்ச்சிகளையும், பாவங்களையும் வர்ண விஸ்தாரமாகக் காட்டிவிடலாமென ஓர் வழியை ஸ்தாபித்தவர் நம்மவர்தான். பரத நாட்டிய சாஸ்திரத்தில் நடியின் ஆடையைப் பற்றிக் கூறுமிடத்து ரஸ பேதங்களுக்கு வர்ண பேதங்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டிருக்கின்றன.

காதற் சகிப்புக்கும், தன்னலமற்ற சேவைக்கும், இறைவனிடம் இரண்டறக் கலப்பதற்கும் 'கருநீலம்' அறிகுறி யெனக் கூறப்பட்டது. 'அத்புதம்' என்ற உணர்ச்சி திடீரென ஏற்படுவது. நெடுங் காலம் நீடித்திராது. அதற்கு 'மஞ்சள்' வர்ணத்தை உருவகமாக்கினர். அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கும் இயல்புடைய செல்வத்திற்கு மஞ்சள் வர்ணத்தைப் புகுத்தியது சரியென்று தோன்றுகிறதல்லவா? கருணை

ரஸத்திற்குப் 'புரு வர்ணம்' பொருத்த முடையதெனக் கூறினர். கோபம், தாபம், முதலிய ரஸ பேதங்களுக்குச் 'சிவப்பு' நிறத்தைத் தந்தனர். பயம், கோரம், ஹாஸ்யம், மடமை முதலிய உணர்ச்சிகளுக்குக் கறுப்பு வர்ணம் தந்தனர்.

சத்தியம், சமாதானம், கருணை, அடக்கம் முதலியவை சாத்வீக குணமெனப்படும். சத்வ குணத்திற்கு வெண்மை அறிகுறியென சுக்ரநீதி ஸாரம் என்ற நூல் கூறுகின்றது. ஆத்திரம், வீரம், காமம் முதலியன ரஜோ குணத்தின் பாற்படுவன. ரஜோகுணத்திற்குச் 'சிவப்பு' அறிகுறியாக்கப்பட்டது. தமோ குணம் மனிதனை வீழ்த்தும். அதற்குக் கறுப்பு வர்ணத்தைப் புகுத்தியது முற்றிலும் பொருத்தமானதே.

மனிதனின் குணாதிசயங்களுக்கு வர்ண விஸ்தாரங்களைத் தந்ததோடு நமது கற்பனை நின்றுவிடவில்லை. தத்தம் இஷ்ட தெய்வங்களுக்கும் பொருத்தமான நிறத்தை ஏற்றி நம்மவர் தொழுதனர். கவிகள் பாடினர். சித்திரக்காரர் ஓவியத்தில் தீட்டினர்.

நிர்மலமான குணமுடைய உமாதேவிக்கும், சர்வ தியாகம் செய்த சிவனுக்கும், அறிவுத் தெய்வமான ஸரஸ்வதிக்கும் வெண்மை வர்ணத்தை நம்மவர் தரவில்லையா? ஆறு பருவங்களை ஷண்முகங்களாகவும், பன்னிரு மாதங்களைப் பன்னிரு கரங்களாகவும் கொண்டு உலகத்தை ஸ்கந்த மூர்த்தி காப்பதாகக் கவிகள் கூறினர். ஆகவே உலகைக் காக்கும் சூரியனுக்கு உதய காலத்தில் ஏற்படும் வர்ணத்தையும், எரியும் தீக்குள்ள நிறத்தையும் புகுத்திக் கந்தபிரானைச் செந்திருக் கடவுளெனக் கூறினர். லக்ஷ்மிக்கு மஞ்சள் நிறம் தரப்பட்டது. காலத்தின் அதிதேவதையான காளிக்கு நீல வர்ணம் தரப்பட்டது. விளைவுக்கு அதிதேவதையென்ற துர்க்கை பசுமை வர்ணத்தாள் என வர்ணிக்கப்பட்டாள்.

உலகத்தில் தாழ்மைக்குண முடையவருக்குக் கறுப்பு வர்ணமே பொருத்தமென்பது சித்திரமரபு. ராவணனென்ற ராக்ஷஸனுக்கும், சூது மிகுந்த சகுனிக்கும் கறுப்பு வர்ணம் தந்தனர் ஓவியர். அஜாந்தாக் குகைகளில் வெகு காலமாக இருந்து வரும் ஓவியங்களைக் கூர்ந்து கவனித்தால், இந்த வர்ண விஸ்தாரத்தை நமது நாட்டுச் சித்திரக்காரர்கள் எவ்வளவு ஆராய்ச்சி செய்திருக்கின்றன ரென்பது விளங்கும். "பதினேழாவது குகையில் உள்ள 'ராஜ ஊர்வலம்' என்ற சித்திரத்தில் கண்யவான்களுக்குச் சிவப்பு வர்ணமும் அடிமைகளுக்குக் கறுப்பு வர்ணமும், தரப்பட்டிருப்பதைக் காணலாம். தெற்கே புதுக்கோட்டைக்கருகே சித்தன்ன வாசல் என்ற இடத்தில் உள்ள பண்டைத் தமிழ்ச் சித்திரத்திலும் வர்ண ஆராய்ச்சி தென்படுகிறது. "கங்காதேவியின் படத்தை வெள்ளைக் கன்னிகையாகத் தீட்டி, அவளுக்கு மஞ்சள் ஆபரணங்களை அணிவித்துச் சென்றனர் ஓவியர்" என்று ப்ரொபஸர் வெங்கடேச்வரா எழுதியிருக்கின்றார்.

இந்த வர்ண விஸ்தாரத்தைக் காவியத்தோடும் ஓவியத்தோடும் நிறுத்தினார்களில்லை. ஜோஸ்யத்திலும் அதைப் புகுத்திவிட்டனர். மனிதனை வாழ்க்கையில் ஆட்டி வைப்பது ஆகாயத்தில் சஞ்சரிக்கும் கிரஹங்களும் நட்சத்திரங்களு மென்பது ஜோஸ்யர் கூற்று. அந்தந்த நட்சத்திரங்களி னின்று வெளிப்படும் வர்ண ஒளிகளுக்கே அந்தச் சக்தி யிருப்பதாகக் கூறினர்.

பரணி, திருவாதிரை, மகம் முதலிய நட்சத்திரங்களினின்று வெளிப்படும் மஞ்சள் ஒளி மனிதனை ஆவேச புத்தியுடையோனாக ஆக்குகின்றதாம். ரோகிணி நக்ஷத்திரத்தின் ஆழ்ந்த மஞ்சள் கிரணம் மனிதனை ரஸிகனாக்குவதாம். மூலா நட்சத்திரத்தின் சாம்பல் நிற ஒளி காமத்தை ஊட்டுவதாகுமென்றனர். பூராடத்தின் கிரணம் சரச குணத்தைத் தரும் எனக் கூறினர். திருவோண நட்சத்திரம் வெண்மை ஒளி அறிவைத் தருமெனக் கூறினர்.

ஜோஸ்யர் மட்டுமல்ல, வைத்தியர்களும் வர்ணத்திற்குச் சிகிச்சா சக்தி இருப்பதாகக் கூறி வந்தனர். இன்று மேனாட்டு வைத்தியர்களும் 'ஸ்பெக்ட்ரம்' சிகிச்சை, 'அல்ட்ரா வயலெட்' சிகிச்சை முதலிய முறைகளில் அதிக ஆராய்ச்சி காட்டுகின்றன ரல்லவா? வர்ணத்திற்குடைய இந்த ஜீவ சக்தியை ஆதியிலேயே நம்மவர் கூடமாகக் கண்டுபிடித் திருந்தனர். 'மதன ரத்னம்' என்ற நூலில் இது விவரிக்கப்பட்டிருக்கிறதாம். அந்தந்த நாழிகைக்குத் தகுந்தாற்போல சூர்ய கிரணங்களுக்கும், அந்தந்தப் பிறைக்குத் தகுந்தாற்போலச் சந்திரன் ஒளிக்கும் தூய சக்தி, தீயசக்தி இருப்பதாக வைத்தியர்கள் கூறினர்.

ஹிந்து நாகரிகத்தில் குடும்ப வாழ்க்கையிலும் வர்ண விஸ்தாரம் புகுந்திருக்கிறது. செந்தாமரைப் பூவின் வர்ணமுடைய புடவை அதிருஷ்டத்திற்கு அறிகுறியென நமது ஸ்திரீகள் நினைக்கின்றனர். உடன்கட்டை யேறுதல், தீக்குளித்தல், தேச கைங்கர்யத்தில் இறங்குதல் முதலிய புனித காரியங்களில் ஈடுபட்ட இராஜ புத்திர வனிதைகள் மஞ்சள் ஆடை அணிந்தனரெனச் சரித்திரம் கூறுகின்றது. சகலமும் துறந்தவ ரென்பதற்கு அறிகுறியாகக் காவிவன்ன ஆடையணிவது சந்யாச லக்ஷணமா யிருந்து வருகிறது. நெற்றியில் ஹிந்து மக்கள் அணியும் குங்கும திலகம், சாந்து, திருச்சூர்ணம், திருநீறு முதலியவைகளுக்கு ஏராளமான உட்பொருள்கள் உண்டு என்பது நம்மவர் மரபு.

வர்ணத்திடத்தும் ஒளியிடத்தும் ஏற்பட்ட அற்புதம் காரணமாக, சகல வர்ணத்தையும் தன்னிடம் கொண்டுள்ள சூர்ய பகவானைப் பிரதிதினமும் பூஜை செய்ய வேண்டுமென்ற நியதி இந்த நாட்டில் ஏற்பட்டது.

உலகப் பிரசித்திப் பெற்ற

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு சன்,

பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், முதலிய வாடை கமழுகின்றது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார்

அண்டு ஸன்,

புகையிலைக் கமிஷன் ஏஜண்டுகள், அண்டு மூக்குத்தூள் வியாபாரிகள்.

39, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு,
தபால் பெட்டி நெ. 189. சென்னை.
தொழிற்சாலை: நெ. 55, ஆச்சாரப்பன் வீதி.

தெய்வ மிருந்தால்?

("திலீபன்" எழுதியது)

கேள்வி ஒன்றுதான்; பல சமயங்களில், வெவ்வேறு காலதேச வர்த்தமானங்களில், நம் உள்ளத்தே எழுகின்றது. ஒரு சம்பாஷணை, ஒரு இளந்தளிர், பெரியதொருமலை, ஓர் கோரக் காட்சி, மெய்ம்மறந்ததோர் பரவச அனுபவம் இத்தனையிலும் அந்தக் கேள்வி பொங்கி எழுந்து விடுவதுண்டு. வாழ்க்கையிலே அந்த நிலைமைகள் சிலமைல் கற்கள்போலாகி விடுகின்றன. கதைக் குதவாதவை, வர்ணனைக்கு ஏலாதவை என்று அவை தோன்றும். சின்னஞ் சிறு வயதில் வேலிப் படலோடணைந்த ஆடாதுடைப் பூவைப் பறித்துப் பறித்து விளையாடி மகிழ்ந்தது இன்னும் உங்களுக்கு ஞாபகமிருக்கிறது. அடுத்த வீட்டுச் சீனுவுடன், மயிரைப் பிடித்திழுத்து, நகத்தால் பீறி, குஸ்தி போட்டதும்தான் நினைவிருக்கிறது. பெரிய போராட்டங்கள், பரம துக்கங்கள், இன்றும் பலனை அனுபவிக்கும் வெற்றிகள் இந்த அனுபவங்களையெல்லாம் நன்றாக நினைவில் வைத்திருக்கிறீர்கள். ஆயிரம் ஆயிரக்கணக்கான, மிகரஸமான, சம்பாஷணைகளையெல்லாம் மறந்துவிட்டதுண்டு; ஆனால், எங்கோ ஒரு நாட்டுப்புறத்தானிடமும், யாரோ சில பேதைகளிடமும் நிகழ்ந்த குட்டிப் பேச்சுக்கள் உங்கள் மனத்தில் குடி புகுந்து திரும்பத் திரும்ப எண்ண அலைகளை எழுப்பிக் கொண்டிருக்கின்றன. மனிதன் கையும் காலும், கண்ணும் காதும், மூக்கும் வாயும் பட்ட அவதிகளும் ரஸித்த அனுபவங்களும் சக்தி மிகுந்தவைதான். ஆனால், உள்ளமென்ற ஒன்று சில சமயம் இவற்றின் துணையின்றியே தனியாய் அதிர்ந்து கிளர்ந்து விடுகின்றது. அது உங்கள் வாழ்க்கைச் சரிதத்திலே நிரந்தரப் பதிவைப் பதித்து விடுகின்றது. இத்தகைய ஒரு பதிவு அந்தச் சம்பாஷணையால் ஏற்பட்டது.

பதினைந்து வருடத்திற்கு மேலாகிவிட்டது. ஒன்றிருவரை ஞாபகமிருக்கிறது. அவர்கள் பெயரும் மறந்து போனால்தான் என்ன மோசம்? அந்த வார்த்தைகள்—தானாகக் கொந்தளித்துக் கிளம்பிய அந்தச் சொற்கள்—இன்றும் அநேகந் தடவைகளில் என் உதடுகளில் நர்த்தனம் செய்கின்றன.

கதைகளிலே, நாடகங்களிலே, சித்திரங்களிலே, தோட்டத்திலே, கடற்கரையிலே, அலுக்காமல் சலிக்காமல் திரும்பத் திரும்பப் பிரசன்னமாகும் மாலை நேரம், அன்றும் நாங்கள் திருவாலூர் ஆலயப்பிராகாரத்தை வலம் வந்த பொழுது, தனது மஞ்சள் வெயில் மங்களக் கோலத்துடன் விஜயம் செய்தது. உற்சவமொன்று மில்லை; விசேஷம் எதுவுமில்லை. நாங்கள் ஏழெட்டுப் பேர்தான். அங்கும் இங்கும் கிடந்த ஒன்றிரு நெருஞ்சி முட்கள் என் காலையே குறி பார்ப்பது போல, வெகு ஜாக்கிரதையாக, நான் நடந்து சென்றேன். (அவ்வாலயப் பிராகாரத்தில் இன்று நெருஞ்சி முள் அனுபவம் கிடைக்குமா கிடைக்காதா என்பதற்கு நான் எவ்வித உத்திரவாதமும் தரமுடியாது.) எங்கள் கோஷ்டியில் மூப்புடைய மாதொருத்தியின் சில சொற்கள் திடீரென என் உள்ளத்தைத் தைத்தன; தலை தானாக நிமிர்ந்தது; உதடுகள் அசைந்தன. அப்பொழுது புறப்பட்ட வார்த்தைகள் "தெய்வமிருந்தால்?"

"அவள் நாசமாய்ப் போக! இதோ வரிசை வரிசையாக நிற்கின்றனவே சிலைகள்! இவற்றுக்குக் கண்ணிருந்தால், அவள் காலுங் கையும் அழுகிச் சாகப் போவது நிச்சயம். அப்பொழுதுதான் இக்குழந்தையின் துயர் தீரும்" என்றாள் அந்த முதியவள். அவள் குறிப்பிட்ட குழந்தை புருஷன் வீட்டார் அழைக்காத ஓர் சிறு பெண். முதியவள் திட்டியது பெண்ணின் மாமியை. "தெய்வமிருந்தால், சுவாமிக்குக் கண்ணுமிருக்குமானால், நீங்கள் இந்த வேண்டு கோளைத்தான் செய்து கொள்ளவேண்டுமோ? அவர் சர்வ சக்தியுடையவர், எல்லாம் வல்லவர், அருட்சோதி என்கிறோம். நல்லதை நினைத்து, தூயவரம் கேட்டு, முயற்சியில் இறங்கவேண்டும். அந்த மாமியின் மனத்தை மாற்ற முடியாத சுவாமி, அவள் காலையும் கையையும் எப்படி அழுகச் செய்ய முடியும்?" என்று கேட்டேன். அனுபவமற்ற பதினாறு அல்லது பதினேழு வயது வாலிபன் ஒருவனது வார்த்தை, பிள்ளை குட்டிகளைப் படைத்த மாதர்களின் அம்பலத்திலே ஏறுமோ? "அவன் ஓர் காந்திப் பித்தன்; வேதாந்தி. இப்படியே எவ்வளவு காலந்தான் தத்துவம் பேசிக் கழிக்க போகிறானோ" என்றாள் என் உறவினள் ஒருத்தி. எல்லாரும் நகைத்தார்கள். தலை குனிந்தேன். அது வெட்கத்தாலல்ல; செருக்குடன் உறவு கொண்ட இரக்கத்தோடுதான்.

அன்று என் மனத்தைத் தாக்கிய "தெய்வமிருந்தால்?" என்ற பதத்தொடர், பல முறை என் உள்ளத்தைக் கிளர்ந்ததுண்டு. தெய்வமிருந்தால், அத் தெய்வத்திடம் நமக்கு நம்பிக்கையிருந்தால், அது நமக்கு உதவியும் புரியுமானால், நாம் கொடுமைக்கு ஏன் அஞ்சவேண்டும்? பொய் ஏன் பேசவேண்டும்? நமது துர்ப் பாஷைக்கு, கேவல இச்சைக்கு, ஒரு மாற்றாக உச்சரிப்பதற்காகவா "தெய்வம்" என்ற சொல் படைக்கப்பட்டது? நம் காலடியில் பணிந்து கிடக்கக்கூடிய அடிமையிடமும் சில வேலைகளைச் செய்யக் கட்டளையிட மாட்டோமே. அத்தகைய வேலைகளைச் செய்வதற்காகவா தெய்வம்? தெய்வத்தைக் குறைந்த பட்சம் நமது நண்பனைப் போலாவது நடத்த வேண்டாமா? பாதைக்கு ஒளி காட்ட, எனது நண்பனின் கை விளக்கை நான் இரவல் தர வேண்டலாம்; ஆனால் என் பாதரட்சையைப் போட்டுவிடுமாறு அவனை நான் கேட்பேனாயின், என்னை விட மூர்க்கன், அரலிகன் எவனாவது இருப்பானோ?

தெய்வமிருந்தால், நான் கோழையாக வேண்டுமோ, என்ன? இயந்திரந்தான் ஆகவேண்டுமோ? "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?" என்றார் கவி திலகர். நாமோ தெய்வத்திற்கும் தெய்வமாக, ஆகிவிட ஆசைப்படுகிறோம். அதை விட அறிவீனம் உண்டா? சக்தியற்ற, செயலற்ற, சலனமற்ற, நாதமற்ற இயந்திரங்களுக்கும், தெய்வமிருந்தால் அந்தத் தெய்வத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவே முடியாது என்பதை மட்டில் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

யாக சாலையில் புத்தன்

(ஸ்ரீயுத தேசிக விநாயகம் பிள்ளை பாடியது)

[உலக சரித்திரத்தில் நாம் மறக்க முடியாத சில காட்சிகள் உண்டு. அவைகளில் மன்னன் பிம்பசாரனின் யாக சாலையில் பகவான் புத்தன் அஹிம்சா தர்மப் பிரசாரம் செய்தது ஓர் அரிய காட்சி. அக் காட்சிக்குப் பின்பு பாரத நாட்டின் வாழ்க்கையிலேயே ஓர் மாறுதல் ஏற்பட்டு விட்டது. உலக சமய உணர்ச்சியிலேயே ஓர் புரட்சி ஏற்பட்டது. அந்த மேன்மையான காட்சியை எத்தனையோ கவிகள் எத்தனையோ விதமாகப் பாடி யிருக்கின்றனர். இக் காலத்துத் தமிழ்க் கவி அதே காட்சியை 'கருணைக் கடல்' என்ற தமது நூலில் பின்வருமாறு வர்ணித்துளார். —சங்கு ஆசிரியர்.]

தாரணி மன்னவன் பிம்பிசாரன்—யாக
சாலை நடுவினில் வந்து நின்றான்.
ஆரணமோதிய அந்தணரும்—நிரந்
தங்கிரு பக்கமாய்க் கூடி நின்றார்.
மந்திரமோதி எரிவளர்த்தார்—புகை
வானையளாவி எழுந்ததம்மா.
இந்தனமிட்டுப் பெருக்கி நின்றார்—தீயும்
எழுநாவிட்டுச் சுழன்றதம்மா.
வேதம் விதித்த விதிமுறையில்—ஒரு
வெள்ளாடுகண்டு பிடித்துவந்து
பாதகமான பலியிடவே—அங்கு
பாரிற் கிடத்தி யிருந்தாரம்மா.
நீட்டிக் கழுத்தை யறுப்பதற்கோ—அதன்
நெஞ்சை வகிர்ந்து பிளப்பதற்கோ
தீட்டியகத்தியும் கையுமாக—ஒரு
தீக்ஷிதர் முன்வந்து நின்றாரம்மா.

*　　*　　*　　*

வேறு

என்றுசொல்லி யாகதீக்ஷிதரும்—வாளை
ஏந்தியகையினை ஓங்கையிலே
பொன்று முயிரினைக் காக்கவரும்—அந்தப்
புண்ணிய மூர்த்தியு மோடிவந்து:
"அண்ணலே இக்கொடும்பாவியிவ்—வேளையில்
ஆட்டினைக் கொல்லாதருள் புரிவீர்
திண்ணியஞான முடையவரும்—இந்தத்
தீவினை செய்வரோ" என்றுரைத்தான்.
காலிலேகட்டிய கட்டவிழ்த்தான்—ஆட்டின்
கண்டமிறுக்கிய கட்டவிழ்த்தான்.
வாலிலே கட்டிய கட்டவிழ்த்தான்—அதன்
வாயினிற்கட்டும் அவிழ்த்துவிட்டான்.
நின்றவர்கண்டு நடுங்கினரே—ஐயன்
நேரிலே நிற்கவும் அஞ்சினரே.
துன்றுகருணை நிறைந்தவள்ளல்—அங்கு
சொன்ன மொழிகளைக் கேளுமையா:
"வாழுமுயிரினை வாங்கிவிடல்—இந்த
மண்ணிலெவர்க்கும் எளிதாகும்;
வீழுமுடலை எழுப்புதலோ—ஒரு
வேந்தன் நினைக்கிலும் ஆகாதையா.
யாரும் விரும்புவ தின்னுயிராம்—அவர்
என்றுமே காப்பது மன்னதேயாம்;
பாரில் எறும்பும் உயிர்பிழைக்கப்—படும்
பாடுமுழுதும் அறிந்திடீரோ?
காடுமலையெலாம் மேய்ந்துவந்—தாடுதன்
கன்றுவருந்திடப் பாலையெல்லாம்
தேடியும்மக்களை யூட்டுவதும்—ஒரு
தீயசெயலென எண்ணினீரோ.
மேடையில் நீங்களும் மூடிப்படுத்திட
மெல்லியகம்பளி தானளித்து
வாடையிலாடிக் கொடுகுவதும்—அதன்
வஞ்சகச் செய்கையோ சொல்லுமையா.
அம்புவிமீதிலிவ் வாடுகளும்—உம்மை
அண்டிப்பிழைக்கு முயிரலவோ
நம்பியிருப்பவர் கும்பியெரிந்திடில்
நன்மையுமக்கு வருமோ ஐயா.
காட்டுப் புலியின் கொடுமையஞ்சி—உங்கள்
காணிழல்தங்கிய ஆடுகளை
நாட்டுப்புலியெனக் கொல்லுவதோ—அந்த
நான்மறை போற்றிய நீதி ஐயா.
நெஞ்சினில் வாயினில் கையினில்—செய்திடும்
நீதியநீதிகள் யாவையுமே
வஞ்சமிலாது மறுபிறப்பில்—உம்மை
வந்து பொருந்தாமற் போயிடுமோ?
தானியம் பற்பலதா மில்லையோ—சுவை
தங்கியகாய் கனிதாமில்லையோ
வானமழைதரு நீரில்லையோ—இவை
வாழ்ந்திடப்போது முணவலவோ?
ஆதலால் தீவினை செய்யவேண்டாம்—ஏழை
ஆட்டினுயிரையும் வாங்கவேண்டாம்
பூதலந்தன்னை நரகமதாக்கிடும்
புத்தியை விட்டுப் பிழையுமையா."

வேறு

வாய்பேசா உயிரெலாம் வாய்பெற்றங்கு
வாதாடி வழக்கிட்ட வாறீதென்னத்
தாய்போலுந் தயவுடைய தருமமூர்த்தி
சாற்றிய நல்லறவுரைகள் யாவுங்கேட்டு

வேறு

தீக்ஷிதரும்வாளை விட்டெறிந்தார்—ஓமத்
தீயெரிகுண்டம் அழித்துவிட்டார்.
மோக்ஷமிவையுந் தருமோவென்றார்—ஞான
மூர்த்தியின்பாதம் பணிந்துநின்றார்.
செய்பிழையாவும் பொறுத்தருள்வீரெனச்
சேவித்து மன்னனும் தாழ்ந்து நின்றான்.
ஐயனே! நாட்டில் கொலைதவிர்த்து—நாளை
ஆணையும் கட்டுவே னென்றுரைத்தான்.

பொது உடைமையின் தத்துவம்

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.)

இப்பொழுது பதவியும் அதிகாரமும் வகிப்பவர்களைக் கீழே இழுத்துத் தள்ளிவிட்டு, அவற்றை நீங்கள் கைப்பற்றி விடுவதாக வைத்துக் கொள்ளுவோம். அதனால் உங்களுக்குச் சந்தோஷம் ஏற்படக்கூடும்; ஆனால், அது பொது உடைமை ஆகிவிடாது. வேலையை யாவரும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொண்டு உழைப்பது தான் பொது உடைமையின் முக்கிய தத்துவம். வேலை செய்யாவிட்டால், வாழ்க்கை நடத்த முடியாது. வேலை இப்பொழுது ஏற்றத் தாழ்வுடன் பங்கிட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. உலக முழுவதும் வேலையை யாவரும் சமத்துவமாகப் பங்கிட்டுக் கொள்ளும்படி செய்யவேண்டும் என்பதுதான் பொது உடைமை இயக்கத்தின் நோக்கம். அவ்வாறு வேலையில் எல்லாரும் பங்கெடுத்துக் கொண்டால்தான், பூரண பலனையும் அடைய முடியும்

ஆனால், இப்போது உலகம் பற்பல சுதந்திர தேசங்களாகப் பிரிந்து கிடக்கிறது. ஆகையால், சமத்துவமான தொழில் பிரிவினையை உலக முழுவதிலும் ஏககாலத்தில் ஏற்படுத்திவிட முடியாது. ஒரு நாட்டில் பொது உடைமை ஸ்தாபிக்கப் படுவதாக வைத்துக் கொள்ளுவோம். என்றாலும், பக்கத்து நாட்டில் இன்னும் முதலாளி ஆதிக்கமே இருந்துவருமானால், பொது உடைமை ஸ்தாபிதமான நாட்டில் கூட அதன் பூரண பலனையும் அடைந்துவிட முடியாது. இதைக் கொண்டு பொது உடைமையே பயனில்லையென்று நீங்கள் அபிப்பிராயப் பட்டுவிடக் கூடாது. உங்கள் வீட்டை நீங்கள் சுத்தமாக வைத்துக்கொண் டிருக்கிறீர்கள். ஆனால், அடுத்த வீட்டுக்காரன் தன் மனையைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லையென்று வைத்துக் கொள்ளுங்கள். இதனால், ஆகாயம் அசுத்தப் படுகிறது. இதைக் கொண்டு, உங்கள் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதால் பயனில்லை என்று நீங்கள் நினைப்பீர்களா? மாட்டீர்களல்லவா? உங்கள் சுத்த உணர்ச்சி அண்டை அயல் வீட்டார்களிடமும் பரவும் வரையில் நீங்கள் உழைத்துக் கொண்டேயிருக்க வேண்டும்; உடனே பூரண வெற்றியோ, லாபமோ கிடைக்கவில்லையே என்று நீங்கள் மனந்தளரலாகாது.

பொது உடைமையில், தனி மனிதர்களுக்குச் சொத்துரிமை கிடையாது. நல்ல பொருள்கள் யாவும் எல்லா மனிதர்களுக்கும் சொந்தமாயிருக்கும்; உலகத்தில் நடைபெற வேண்டிய சகல உழைப்பையும், உலக மனிதர்கள் யாவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். எல்லா மனிதரும் தன் தன் தேவைக்கு வேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டு, தன் தன் சக்திக்கியன்ற வேலையைச் செய்வார்கள். பொது உடைமை ராஜ்யத்தில் "இது என் வீடு; இது என் பணம்; இது என் மகன் அல்லது மகளுக்கு அல்லது பேரனுக்குப் போய்ச் சேரும்" என்றெல்லாம் நீங்கள் சொல்லக் கூடிய சாமான்கள் இருக்காது. "இது என்னுடையது" அல்லது "இது உன்னுடையது" என்ற பேச்சே, பொது உடைமை ஆட்சியில் கிடையாது. இப்பேர்ப்பட்ட நிலைமை எப்படி யிருக்க முடியும் என்றுதான் இப்பொழுது தோன்றும். ஏனென்றால், சொத்துரிமை எண்ணத்திலேயே நாம் வளர்ந்து ஊறிக் கிடக்கிறோம். ஆகையால், தனி மனிதனுக்குச் சொத்தே இல்லாத உலகத்தை நாம் உருவகம் செய்து பார்க்க இயலாமற் போகிறது. ஆனால், சில உதாரணங்களின் உதவியைக் கொண்டு, அதை நாம் படிப்படியாக விளக்கிக் கொள்ளலாம்.

தண்ணீரை உதாரணமாக எடுத்துக் கொள்ளுவோம். நாம் சாதாரணமாக எவ்வளவு தண்ணீரையாவது எடுத்துச் சேமித்து, நமக்குச் சொந்தமென்று பூட்டிவைப்பதில்லை. ஒவ்வொருவரும் தன் தனக்குத் தேவையான தண்ணீரை எடுத்து, தனது தற்பொழுதைய உபயோகத்துக்கு மட்டில் வைத்துக் கொள்ளுகிறார்கள். ஒரு நதி அல்லது ஏரியின் எந்தப் பாகத்தையாவது தனி மனிதர்கள் உபயோகத்துக்கென்று பொதுவாக ஒதுக்கி வைப்பதில்லை. இதே கொள்கையை இதர சொத்துக்கள் மீதும் பிரயோகித்துப் பார்த்தோமானால், பொது உடைமைத் தத்துவத்தைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளலாம். மனிதனுடைய உழைப்பால் விளையும் தானியங்களும் உணவுப் பொருள்களும் இருக்கின்றனவே; இவற்றின் தன்மை வேறு விதமானது. இவை போன்றவற்றில் தனி மனிதனுக்குச் சொத்துரிமை அவசியமாக இருக்கிறது என்று நீங்கள் நினைக்கக் கூடும். ஆனால், உண்மையில் அப்படியொன்றும் வித்தியாசம் கிடையாது. தபால் போக்குவரத்து ஊழியம் ஒரே மொத்தமாக நடைபெறுகிறது. ஒவ்வொரு மனிதன் கடிதமும் அவனவனிடம் போய்ச் சேருகிறது. இவ்வேலையை ஜனசமூகம் முழுவதும் சேர்ந்து செய்யவில்லையா? இவ்வாறே மனிதர்களின் ஏனைய தேவைகளையும், எல்லார் நன்மைகளையும் அனுசரித்த முறையில், கூட்டுறவோடு பூர்த்தி செய்து கொள்ள முடியும். தபால், வீதிவிளக்கு, நகர சுகாதாரம் முதலியவை எல்லாம், பொது உடைமை சாத்தியமென்பதற்கு உதாரணங்களாய் விளங்குகின்றன.

பம்பாய்த் துணி ஆலைகளைப் பார்க்கலாம். அது தனி மனிதர்களின், அதாவது பங்குதார்களின் சொத்துத்தான். ஆனால், இந்தப் பங்குதார்கள் அதை நிர்வாகம் புரியவில்லை. லாபத்தில் இவர்கள் பங்கு பெறுவது வாஸ்தவம் தான். ஆனால் கம்பெனி நிர்வாகிகளே அவற்றை நடத்துகிறார்கள். இதே பங்குதார்கள் தங்கள் பங்கு பாத்தியங்களைத் தேசம் முழுவதற்குமான ராஜாங்கத்தினிடம் ஒப்படைத்தாலும் அவர்களுக்கொன்றும் நஷ்டமில்லை. இந்த ஆலைகளின் நிர்வாகிகள் பங்குதார்களின் ஊழியர்களா யிருப்பது போய், அப்போது தேச முழுவதன் ராஜாங்கத்திற்கே ஊழியர்களாகி விடுவார்கள். இந்த ஆலைகள் ராஜாங்கத்திற்குச் சொந்தமாயிருந்தால் என்ன, அல்லது காத்தான், தீத்தான், மூக்கன் என்ற யாருக்காவது சொந்தமாயிருந்தாலென்ன? அதனால் துணியின் தன்மை ஒன்றும் கெட்டுவிடப் போவதில்லை.

ஒரு ஜனசமூகத்தின் போஷணைக்கு அவசியமான சகல வேலையையும், அதன் செல்வ உற்பத்தியையும், இவ்விதமாக அந்த சமூகம் முழுவதற்கும்

சேவை செய்யும் காரியஸ்தர்கள் மூலம் நடத்திக் கொள்ளலாம். அந்தக் காரியஸ்தர்களை, சமூகமே நியமித்துக் கொள்ளலாம். இப்பொழுதோ அப்படி நடக்கவில்லை. ஏதோ சில தனி மனிதர்கள் சேர்ந்து இந்த வியாபாரங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நாடகம், சங்கீதம், ஸினிமா முதலிய சகல களியாட்டங்களையும், இவ்வண்ணமே எல்லாரும் அனுபவிக்கக் கூடியவையாக, பொது உடைமை ரீதியில் நடத்தலாம். திருப்பதி மலை இருக்கிறது. அது எந்தத் தனி மனிதருக்காவது சொந்தமாயிருக்கிறதோ? அங்கே போகும் சகல யாத்திரிகரும் தான் அதன் காட்சியானந்தத்தை அனுபவிக்கிறார்கள். தாஜ்மஹால் காட்சியையும் எல்லாரும் அனுபவிக்கலாம்; எவரும் தன்னுடைய் சொத்து என்று பாத்தியம் கொண்டாடவில்லை. இதே மாதிரியே, சகலமான சௌந்தரியக் காட்சிகளையும் எல்லாரும் ஐக்கியமாய் அனுபவித்து இன்புறும் வண்ணம், பொதுவில் நிர்வகிக்க முடியும்; அது சாத்தியமே யாகும்.

[இது 1930-ம் வருஷம் பல்லாரிச் சிறையில் இருக்கும்பொழுது, சகோதர அரசியற் கைதிகளுக்கு, ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலசாரியார் செய்த ஒரு பிரசங்கத்தின் ஓர் பகுதியாகும். "Chats Behind Bars" என்ற ஆங்கிலப் புத்தகத்தினின்றும் இது எடுக்கப்பட்டிருக்கிறது.]

Chats Behind Bars

BY

C. RAJAGOPALACHARI

Price As. 6 *Postage extra.*

BOOKS by MAHATMA GANDHI

(in English)

		Rs.	A
Satyagraha in South Africa	...	4	8
Young India Vol. I	...	4	0
Young India Vol. II	...	4	0
A Guide to Health	...	0	12
Neethi Dharma	...	0	8
Indian Home Rule	...	0	8

Swathanthra Sangu Book Depot

8-c, Pycrofts Road,

Triplicane, Madras.

பழமையின் புதுமை

(அரண்மனையான் கூறுவது)

மியூஸியத்துக்குப் போனால் அழகான கண்ணாடி அலமாரிகளில் ஏராளமான கற்களை வரிசை வரிசையாக அடுக்கி வைத்திருக்கிறார்கள். உடைந்த சட்டிகளைப் போட்டோ படம் பிடித்துத் தொங்க விட்டிருக்கிறார்கள். பல்லாயிர வருஷங்களுக்கு முன்னே நமது தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தாவுக்கு............தாத்தா மிருகப் பிராயமாக இருந்தபோது அந்தக் கற்களையும் சட்டிகளையும் உபயோகித்தாராம். அதற்காக இப்போது அந்த ஓட்டைச் சட்டிகளுக்கும் கூழாங் கற்களுக்கும் மதிப்புத் தரப் பட்டிருக்கிறது.

இதே மாதிரி இன்னும் பல்லாயிரம் வருஷங்களுக்குப் பிறகு என்னவாகலாம்? நாம் இப்போது நாகரிக வஸ்துக்களெனப் போற்றும் ஏரோப்ளேனும், மோட்டார் வண்டியும், பழைய சாமான்களாக ஆகிவிடலாம். நமது பேரனுக்குப் பேரனுக்குப் பேரனுக்கு............பேரன் கண்ணாடிப் பீரோவில் ஓர் மோட்டாரைக் காட்டி, "1934-ம் வருஷத்திலே இந்தமாதிரி ஓர் ஓட்டை வண்டியை நமது மூதாதையர் உபயோகித்துக் கொண்டிருந்தார்களாம். அதற்கு பெட்ரோல் விட்டு ஓட்டினார்களாம். கொஞ்ச காலம் உபயோகித்த பின்பு அந்த வண்டி ஓட்டையாகி நடுத் தெருக்களில் நின்று விடுமாம். சவாரி செய்பவர்களெல்லாம் வண்டியினின்று இறங்கித் தள்ளு தள்ளென்று தள்ளி ஓடச் செய்தார்களாம்" என்று சரித்திரம் கூறித் தற்போதைய வாழ்க்கையைக் கேலி செய்யக்கூடும். அப்போது எவ்வாறு விஞ்ஞான அறிவு பரந்திருக்குமோ, என்னென்ன புதுப் புது யந்திரங்கள் தோன்றி யிருக்குமோ!

விஞ்ஞானத்தைப் பற்றி எனக்கென்ன கவலை? நம்மால் புறக்கணிக்கப்படும் இன்னொரு சிறிய வஸ்துவை எடுத்துக் கொள்வோம். மிக்க அலட்சியமாக சினிமா நோட்டீசுகளையும், துண்டு விளம்பரங்களையும் வாங்கிச் சிறிது நேரத்தில் வீசி யெறிந்துவிடுகிறோம். ஆனால், இன்னும் நானூறு வருஷங்களுக்குப் பின் இதே குப்பைக் கடுதாசிகள் சில காப்பற்றப் பட்டு மதிப்புடையதாகி விடலாம்.

"தேசீய ஓட்டல்
உங்களுக் கென்னவேண்டும்?
மரக்கறி போஜனமும்
மாமிச போஜனமும்
தனித்தனியே அளிக்கப்படும்."

இப்படி ஓர் விளம்பரப் பிரசுரம் என் கண்ணில் பட்டது. இந்த விளம்பரத்தைப் பற்றியே எனக்கு மேலே சொன்ன எண்ணங்கள் தோன்றின. 1934ஆம் ஆண்டில் தமிழர் நடத்திய வாழ்க்கையை, 2400ஆம் ஆண்டிய தமிழன் ஆராய்ச்சி செய்து அறிந்துகொள்வதற்கு இந்தத் துண்டுக் கடுதாசி உபயோகமா யிருக்குமென்று எனக்குப் பட்டது. மியூஸியங்களில் இத்தகைய பிரசுரங்களைச் சேமித்து வைப்பார்களாயின் 2400ஆம் ஆண்டு ஆசிரியரொருவர் அவைகளை ஆராய்ச்சி செய்து "இருபதாம் நூற்றாண்டில் தமிழர் நிலை" என்று ஓர் அரிய நூல் எழுதிக் கீர்த்தி பெறக்கூடும். இந்தத் துண்டுப் பிரசுரங்களைப் போட்டோ எடுத்து அச்சுப் போட்டு ஏராளமாக விற்கவும் கூடும். பணஞ் சேர்க்கவும் இடமேற்படலாம். நான் இப்படி ஊகிப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா?

"தஞ்சாவூரில் கிடைத்த 8-ம் நூற்றாண்டு ஏட்டுச் சுவடிகள் இவை!" என்று ஓர் புலவர் பெருமையாகச் சொல்கிறார். வியப்புறும் கண்களோடு அனைவரும் கவனிக்கின்றனர். சோழனின் தாமிர சாஸனம், பல்லவரின் பாலி பாஷை, பாண்டியனின் கல்வெட்டு, கடைச் சங்க ஓலைச் சுவடி இவைகளுக்காகப் பிரமாதமாக வேட்டைகள் நடக்கின்றன அல்லவா? அவைகளின்று தமிழரின் பழைய வாழ்க்கை, சமூகக் கொள்கை, அரசாங்கத் தாராளம் இவைகளை நவீன ஆராய்ச்சிக்காரர் கண்டு பிடித்து மேடைதோறும் கர்ஜ்ஜிக்கின்றார்களல்லவா? ஆனால் ஆயிரம் வருடங்களுக்கு

முன்னே யாராவது சுவடியைக் கண்டு அதிசயப்பட்டிருப்பார்களா? பிற்காலத்தில் ஆராய்ச்சிக்கும், புலவரின் பொழுது போக்குக்கும் அச்சுவடிகள் உபயோகப் படுமென யாராவது எண்ணியிருந்திருப்பார்களா? எல்லாம் காலத்தின் சுழற்சி; காலம் ஆக ஆக பழமைக்கு 'வியப்பு மெருகு' ஏறுகின்றது.

ஆகவே ஒரு யோசனை. மகாத்மா காந்தியடிகள் சுற்றுப் பிரயாணம் செய்கையில் அவருக்கு எவ்வளவோ வரவேற்புப் பத்திரங்கள் அளிக்கப்படுகின்றன. அவைகள் ஏலத்தில் விற்கவும்படுகின்றன. அவைகளை ஒரு குடும்பத்தார் சுமார் 300, 400 வருஷங்களுக்கு வம்ச பரம்பரையாகக் காப்பாற்றி வைத்தார்களானால், பிற்காலத்தில் எத்தகைய மதிப்பு ஏற்படலாம் தெரியுமா? மேனாட்டில் ஷேக்ஸ்பியரின் கையெழுத்துப் பிரதியொன்று பதினாயிரம் பவுனுக்கு விற்கப்பட்டதாம். அதே மாதிரி மகாத்மாவின் வரவேற்புப் பத்திரமொன்றுக்கு எத்தனை ஆயிரம் ரூபா மதிப்புப் பிற்காலத்தில் ஏற்படுமோ? சமீபத்தில் ஒரு ஆசிரியர் எழுதியபடி காந்தி சரித்திரம் பிற்காலத்தில் ஓர் புராணமாய் விட்டால், அதற்கேற்ப 1930-ல் அச்சடித்த ஓர் கடுதாசியும் கிடைத்தால், அடடா, தமிழ் நாடு என்ன அல்லோல கல்லோலப் படுமோ! பல வருடங்களுக்கு முன்னே சீதா தேவியின் சுயம் வரத்திற்காக ஜனக மகாராஜன் விடுத்த மணவோலையின் பிரதியொன்று அகப்பட்டு விட்டதாக 'ஸமுஸ்கிருத அகாடமி'க்காரர் சொன்னால் எவ்வளவு வியப்பு நமக்கு உண்டாகுமோ அவ்வளவு நமது சந்ததியார்களுக்கும் ஏற்படுமென்று தோன்றுகிறது.

எதிர்கால ஜோதிடம்

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால், உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதுர், பிதுர், ஸந்தானம், சத்ரு, ருணம், களத்திரம், களத்திர ரூபம், பாக்கியம், ஜீவனம், தொழில் லாபம், விரையம் ஆக இத்யாதி விஷயங்கள் பூராவும் தெரிவிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி நடக்கும் பலன் எழுத ரூ. 2. பலன் சரியாயில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

அருட்பிரகாசர் ஜோதிடாலயம்,
வைத்திக் குப்பம், புதுவை. (பிரஞ்சிந்தியா.)

புலவர் சுதந்திரம்

ஸ்ரீயுத செல்லம் எழுதியது

பழங்காலப் புலவர் பெயர்களே விசித்திரமாய் அமைந்தவை. நரிவெரூஉத் தலையார், இரும்பிடர்த் தலையார், நெட்டிமையார், ஆலியார் என்பன அவைகளிற் சில. அக்காலத்திய புலவர்கள் எல்லாம் உள்ளதை உள்ளபடி கூறுவதற்குச் சற்றும் அஞ்சாதவர்கள். எவ்வளவு பெரிய அரசனாயினும் அவர்களுக்குக் கவலையில்லை. அவன் செய்வது தவறாயிருந்தால் அதைக் கூசாமல் அவன் முகத்துக்கெதிரே எடுத்துக் கூறிப் பரிசும் பெறுவார்கள். கேட்பவர்களும், புத்தி உடையவர்கள். அவர்களும் உண்மையை உணர்ந்து மகிழ்வார்கள். தங்கள் பிழைகளைத் திருத்தியும் கொள்வார்கள். ஆனால் இக்காலத்திலோ, கவிராயர் என்றும், அவதானிகள் என்றும் தாங்களாகவே சிருஷ்டித்த பட்டங்களைத் தம் பெயர்களுக்கு முன்னும், பின்னுமாக இட்டுக்கொண்டு கொக்கரையூர் ஜமீன்தார் தாசி மரகதவல்லியைத் தமது மோட்டாரில் வைத்துக்கொண்டு ஊர்வலம் வந்த உலாச் சிறப்பையும், ராவ் பகதூர் லக்கண்ண செட்டியார் சாராயம் குடித்துச் சாக்கடையில் புரண்ட நடனச் சிறப்பையும் பற்றித் தெம்மாங்குகளாகவும், டப்பாக்களாகவும் பாடி நிறைத்து விடுகிறார்கள். இப்படியும் தமிழ்க் கவிதையைப் பாழாக்க வேண்டுமா?

குறுங் கோழியூர்க் கிழார் என்பவர் ஒரு பெருந் தமிழ்ப் புலவர். சுமார் 1500 வருடங்களுக்கு முன் இருந்தவர். யாராவது ஓர் அரசனைப் பாடிப் பரிசில் பெறவேண்டும் என்று எண்ணினார். யோசித்துப் பார்த்தார். பிழை செய்தவர்கள் யாராவது இருக்கிறார்களா? அப்படி இருந்தால் அவர்களுக்குப் புத்தி சொல்வது ஒன்று, பரிசில் பெறுவது ஒன்று ஆக இரண்டு காரியங்களையும் ஒரே தடவையில் முடித்துக் கொள்ளலாமல்லவா என்று நினைத்தார்.

யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பவன் ஓர் சிறந்த அரசன். அவன் சற்று அவசரப்பட்டுச் சமயத்தை யோசியாது பாண்டியன் தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியனோடு போர்க்கு வலியச் சென்று சிக்குண்டான். பின்பு சூழ்ச்சியால் அவனிடமிருந்து தப்பி வந்து சேர்ந்தான். அவன் தான் தமக்கு ஏற்றவன் என்று தீர்மானித்தார் புலவர்.

சரசரவென்று அந்த அரசனிடம் போனார். "குமரி முதல் இமயம் வரையிலும் உள்ள நாடுகள் உனக்குச் சொந்தமானவைதான். உன் பெரியோர் சம்பாதித்த சொத்தை நன்றாகத்தான் காப்பாற்றி வந்திருக்கிறாய். அதில் ஆட்சேபணை இல்லை. தனக்காக வெட்டப்பட்டு இலை மூடிய குழிக்குள், கவனியாமல் சென்று வீழ்ந்து, பின்பு தன் பலத்தால் குழியைத் தூர்த்துத் தப்பி வந்த மதயானை போன்றவன் நீ. மறுபடியும் நீ தப்பி வந்தால் நல்ல பிள்ளைகள் என்று நீ மதித்து முன்பு பிடுங்கிக்கொண்ட நாட்டையும் சொத்தையும் திருப்பிக் கொடுத்துவிடுவாய் என்று உன் பகைவர் சிலர் எண்ணினர்; அதனால் அவர்கள் நீ சிக்குண்டபொழுது வாலை மடக்கிக் கொண்டு சும்மா இருந்துவிட்டு இப்பொழுது வந்து தங்கள் காரியத்தை ஜயித்துக்கொள்ள வேண்டி உனக்குப் பணிவிடை செய்கின்றனர். சில அசடுகள், நீ சிக்குண்டதை அறிந்ததும் அசட்டுத் தனமாகப் படையெடுத்து வந்து உன்னால் கொள்ளப்பட்ட தங்கள் நாட்டைத் திரும்பச் சொந்தமாக்கிக் கொண்டார்கள்; அவர்கள் தங்களுக்கு என்ன நேருமோ என்று நடுங்கிக் கொண்டே மூஞ்சியில் அசடு வழிய உன்னிடத்தில் கைகட்டி நின்று பணிவிடை செய்கிறார்கள்" என்று வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல் கூறிவிட்டுத் தம் காரியத்தையும் மறந்துவிடாமல் "யாருக்கு என்ன கேட்டாலும் கொடுக்கும் வள்ளலல்லவா நீ!" என்றார்.

அரசன் என்ன செய்தானென்று நினைக்கிறீர்கள்? புலவர் தூக்க முடியாது முதுகு ஒடியும்வரை பணம் கொடுத்தான். நல்ல தண்டனையல்லவா இது! (புறநானூறு).

சுந்தர வாழ்வு

(ராஜாத்தியின் கடிதத்திற்கு ரங்கத்தின் பதில்)

ராஜம், என் அன்புக்குரியவளே,

ஆம்; நீ அன்று எழுதியது பழங் கதைதான். எங்கும் நிகழ்ந்து வருவதுதான். இருந்தும், காரியம் மிஞ்சிய பின்னரே, நாம் கூக்குரல் இடுகிறோம் என்கிறாயே அதுவும் என்னவோ உண்மைதான். ஆனால்?

உன் கமலத்தை, அல்ல, நார்வே தேசத்து ஆசிரியர் இப்ஸனால் கற்பிக்கப்பட்டு உன்னால் 'கமலம்' என்று பெயரிடப்பட்டவளை எடுத்துக்கொள்வோம். தன் வீடு அவளுக்குச் சிறையாகத்தான் படுகிறது. அவள் கணவன் வேணுவும், குழந்தைகளும், அவளைப் பற்றியவரையில், கை விலங்குகள். எனக்குக் கமலத்தினிடம் கோபம் ஏற்படவில்லை. எவ்வாறு ஏற்படும்? சுதந்திரம் விரும்பினால், தன்னை அறிந்துகொள்ள விரும்பினால், மனிதப் பிறவியைத் தன்மட்டிலே மேன்மையுறச் செய்ய விரும்பினால், அவ்வாறு விரும்பும் ஒருத்தியிடம் எவ்வாறு கோபம் கொள்வது? கமலத்தினிடம் எனக்கு அநுதாபந்தான் ஏற்படுகிறது. ஆனால், இந்த அநுதாபம், அவள் பெண், ஆகவே, சமூக வாழ்க்கைக் கட்டுப்பாடுகளால் அழுத்தப்பட்டவள்; வீடு என்னும் சிறையிலே, கணவன், மக்கள், என்ற கை விலங்கு பூண்டவள் என்பதால் மட்டும் ஏற்படவில்லை. பின் எதனால் என்பாயோ? சொல்கிறேன், கேள்.

ஸ்டீவன்ஸன் என்னும் ஆங்கில ஆசிரியர் இயற்றிய 'மில்லில் இருந்த வில்' என்ற அழகிய சிறு கதையொன்று நாலைந்து வருஷங்களுக்கு முன் வாசித்துக் காண்பித்தாயே, ஞாபகம் இருக்கிறதா? "இரண்டு அணில்கள் ஒரு கூட்டிலே. ஒன்று கூட்டை உட்புறத்தில் சுற்றிச் சுற்றி வந்து, வெளியுற நினைந்து, வேதனை உறுகிறது. அதற்கு ஓய்வில்லை, சாந்தியில்லை. மற்றொன்று, கூட்டின் நடுவிலே அமர்ந்து 'கூட்டில் இருக்கிறோம்; வெளியேற வகையில்லை' என்றுணர்ந்து, கூட்டினுள்ளே கிடக்கும் தானியத்தைக் கொறிக்கிறது. எந்த அணில் உயர்ந்தது?" என்று அந்தச் சிறு கதையில் வருங் கதா பாத்திரங்களில் ஒன்று சொல்வதை நான் மறக்கவேயில்லை. நாம் யாவரும் கூட்டினுள் இருக்கிறோம். ஒவ்வொருவருக்கும் சிறையொன்று இருக்கிறது. கமலத்திற்குத் தன் வீடே சிறை. வேணுவுக்குத் தன் மனைவியின் சுயேச்சைத் தாபமே சிறை. இருவரும் விடுதலையடைய முயல்வதில் ஆச்சர்யம் இல்லை. அம்முயற்சியில் ஒருவருக்கும் கோபம் வர முகாந்திரம் இல்லை. ஆனால், கமலத்துக்கும், வேணுவுக்கும், விடுதலையென்பது ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்குப் போவதுதான் என்பது தெரியுமோ, என்னவோ!

'மரப்பாச்சி வீடு' என்றாள் கமலம் தனது இல்லற வாழ்க்கையை. இல்லற வாழ்க்கை மட்டு மல்ல, வாழ்க்கை முழுதுமே, உலகமே ஒரு மரப்பாச்சி வீடுதான் என்பது என் நினைவு. என் கணவனைப் போலவும், என் குழந்தை கண்ணனைப் போலவும் எனக்கு மரப்பாச்சிகள் கிடைத்தனவே யென்று நான் அடையும் சந்தோஷத்திற்கு அளவில்லை. அவர்கள் என்னை மரப்பாச்சியாய் நினைந்து இன்பமடைந்தால், அதனால் என் இன்பம் எவ்வாறு குறையும்? அதிகமல்லவோ படுகிறது? உண்மையில், கமலத்தின் துயரத்திற்குக் காரணம் அவள் மரப்பாச்சியாகக் கருதப்பட்டதல்ல; அவளுக்கு மரப்பாச்சி யொன்றும் இல்லாக் குறையே.

இதனால் பெண்கள் அடிமைகளாகவே இருக்க வேண்டு மென்று நான் சொல்வதாக நினையாதே. சமூகம் விளைக்கும் தீமையின்றும் நாம் விடுதலை அடைய வேண்டியதுதான். வீடும், குழந்தையும், கணவனும் நமது வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் இடையூறாகத் தோன்றினால், அவைகளைக் கை விட நமக்குச் சுதந்திரம் வேண்டியதுதான். ஆனால் அவ்வாறு தோன்றுமா என்று எனக்குச் சந்தேகம் உண்டாகிறது. ஏனென்றால், உன்னிடம் என்ன ஒளிப்பு; வீடும், கணவனும், குழந்தையும், என் சுதந்திரத்தைக் குறைக்கவேயில்லை. அவை என் சுதந்திரத்தின் உருவங்கள். அவையில்லாவிட்டால் எனது சுதந்திரம் உருவற்ற, உயிரற்ற பேச்சாக முடியும். இப்பொழுதோ, என் வாழ்க்கையின் அமைதியும் இன்பமும், கமலம் எதைச் சிறையென நினைந்தாளோ, அதனுள்ளே விளைகின்றன.

உன் கடிதம் வந்த தினம். சாயங்காலம். ஆற்றங்கரைக்குப் போனேன். கண்ணன், கூட ஓடி வந்தான். (நீ பார்த்தபோது இருந்த கண்ணனாயில்லை அவன். போன பங்குனியோடு வயது நான்கு நிரம்பிவிட்டது. அவன் படுத்தும் பாட்டுக்கும், செய்யும் குறும்புக்கும், எனக்குக் கொடுக்கும் இன்பத்திற்கும் எல்லையில்லை.) ஆற்றிலே ஜலம் கொஞ்சமாக ஓடிக்கொண்டிருந்தது. பரந்து, இள வெயிலில் மின்னிக் கிடந்த மணல் மேலே, ஒரு மரங் குத்திப் பறவை உட்கார்ந்து தனியரசு செலுத்திக் கொண்டிருந்தது. என்னைக் கண்டதும் சிவ்வென்று பாய்ந்து மாலை வெயிலிடையே, வர்ண நூலொன்றை நெய்து மறைந்தது. நானும், கண்ணனும் மணலிலே உட்கார்ந்தோம். இல்லை, நான் உட்கார்ந்தேன். கண்ணன் உட்கார்ந்தும், எழுந்தும், ஓடியும், மணலைத் தன் சிறு விரலால் அளைந்து விளையாடி நின்றான். சிறிது நேரத்தில் உன் கடிதத்தை நினைந்து அவனை மறந்தேன். ஏதேதோ எண்ணங்கள், மேற்கு வானச் சிவப்பு வெள்ளத்திலே உதயமாகி என் மனதிலே அஸ்தமித்தன. அந்தியின் மோனம் என்னை மயக்கியது.

இருந்தாற் போலிருந்து, மிருதுவான சிறு விரல்கள் என் கண்களைப் பொத்தின. கலகலவென்று நகைத்து "யாயு? சொல்" என்றது ஒரு மழலைக் குரல், என் கண்ணனது அமுதக் குரல். சாயங்காலச் செவ்வானத்தின் அழகும் உன் கடிதமும், அதில் நீ குறித்துள்ள காட்சியும், இவை விளைத்த எண்ணங்களும், என் குடும்ப வாழ்க்கையின் இன்ப துன்பங்களும், மூடிய என் விழியின்முன் தோன்றி மறைந்தன.

'யாயு? சொல்' என்றது குரல் மறுபடியும். "என் தங்கக் கண்ணு" என்று சொல்லி என் கண்ணனைத் தழுவி முத்தமிட்டேன். நான் அடைந்த இன்பத்தை உனக்கு எப்படிச் சொல்லமுடியும்? என் இதயம்

அன்பினால் பூரித்தது. என்னையும், என் சிறுவனையும் பார்த்துக் கண் சிமிட்டி நின்ற ஒரு நட்சத்திரத்தைப் பார்த்து நகைத்தேன்.

மரப்பாச்சி வீடு, மரப்பாச்சி வீடு! ஆம், மரப்பாச்சியா யிருப்பது கஷ்டம் தான். 'மனித ஜன்மமாய்' இருக்க வேண்டியதுதான். ஆனால் மனித ஜன்மமாய் இருப்பதற்கு 'மரப்பாச்சிகள்' வேண்டியிருக்கிறது என்பதை மறக்கவே முடியாது. வீடும், கணவனும், கண்ணனும் என் மரப்பாச்சி. 'ஸ்திரீ விடுதலை' என்ற விஷயம் உன் மரப்பாச்சி 'சுதந்திரம்' என்பது உன் கமலத்தின் மரப்பாச்சி. எந்த மரப்பாச்சி உயர்ந்தது என்று யாரால் சொல்லமுடியும்?

வேதாந்தி யென்பாய் என்னை. கர்நாடகம் என்பாய். எது வேண்டுமென்றாலும் நினைத்துக்கொள். மனதில் பட்டதைச் சொல்லிவிட்டேன். இனி விஷயமில்லை; நேரமும் இல்லை. உன்னிடம் என்ன வெட்கம்? அவர் குரல் கேட்கிறது. நான் போகிறேன். விடை கொடு,

உன் நேச,
ரங்கம்.

மகாத்மாவின்
தமிழ்நாட்டு விஜயம்
1934ளு ஜனவரிமீ 24உ
முதல் ஆரம்பம்.

எல்லா விடங்களிலும் ஜனங்கள் நிசப்தமா யிருந்தாலன்றி மகாத்மாவின் பேச்சைக் கேட்க முடியாது.

விவாஹத்திற்கு

ரூ. 1000

உங்களுக்கு வேண்டுமா?

விவரங்களுக்கு எமக்கெழுதவும்:—

கலியாண உதவி நிதி,

589, பைகிராப்ட்ஸ் ரோட்,

மதருஸ்.

தமிழ் நாட்டில் காந்திஜி

ஜனவரி மாதம்

4	தேதி	தும்கூர்
,,	,,	பெங்களூர்
5	,,	மைசூர்
6	,,	சென்னப்பட்டணம்
,,	,,	காங்கேரி
7	,,	பெங்களூர்
8, 9	,,	(பெங்களூரில் ஓய்வு)
10	,,	ஒலவக்கோடு
,,	,,	குருவாயூர்
11 தேதி முதல் 19 தேதி வரையில்,		(மலையாளத்தில் சுற்றுப் பிரயாணம்)
20	,,	கொல்லம்
,,	,,	திருவனந்தபுரம்
21	,,	திருவனந்தபுரம்
,,	,,	நாகர் கோயில்
22, 23	,,	(திருவனந்தபுரத்தில் ஓய்வு)

தமிழ் நாடு

24	,,	திருநெல்வேலி
,,	,,	தூத்துக்குடி
25	,,	விருதுநகர்
,,	,,	ராஜபாளையம்
26	,,	மதுரை
,,	,,	காரைக்குடி
27	,,	தேவகோட்டை
,,	,,	சிவகங்கை
28	,,	பொள்ளாச்சி
,,	,,	போத்தனூர்
29 முதல் பிப்ரவரி 5 தேதி வரையில்		(குனூரில் ஓய்வு)

பிப்ரவரி மாதம்

6	தேதி	ஈரோடு
,,	,,	திருச்செங்கோடு
7	,,	சேலம்
8	,,	வேலூர்
,,	,,	காஞ்சீபுரம்
9	,,	பரங்கிப் பேட்டை
,,	,,	சிதம்பரம்
10	,,	திருவாலூர்
,,	,,	கும்பகோணம்
11	,,	திருச்சினாப்பள்ளி

தேசியச் சமையல்

(மகாத்மா காந்தி)

வரவேற்பு சபையோர் எங்களுக்காகக் கண்டபடி செலவு செய்வதாய்க் காண்கிறேன். வகைவகையாய் இனித்த தின்பண்டங்களைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு இடங்களில், எங்களுக்காக குஜராத்தி சமையற்காரர்களையே அமர்த்திவிட்டார்கள். இதெல்லாம் அநாவசியமாகும். நாம் மாகாண பக்தியோடு அடைத்துக் கிடக்காமல் தேசீய மயமாகிவிட வேண்டுமானால், பிறமாகாண உணவுகளை உண்ணப் பழக்கிக் கொள்ளவேண்டும். நமது சுவைகளை எளிதுசெய்து, கொள்ள வேண்டும்; எல்லா மாகாணத்தவரும் சிரமமின்றிச் சாப்பிடக் கூடிய ஆரோக்கியமான ஆகாரத்தை தயார் செய்யத் தெரிந்து கொள்ளவேண்டும்.

எங்கள் சுற்றுப்பிரயாணம் ஆத்ம பரிசுத்தம் செய்து கொள்ளுவதற்கான ஓர் இயக்கம் சம்பந்தமானது என்பதை ஞாபகப் படுத்துகிறேன். உயிர் வாழ்வதற்கு வேண்டிய ஆகாராதிகளைத் தவிர, வேறெந்த ஆசையையும் பூர்த்திசெய்து கொள்ள எங்களுக்கு உரிமையில்லை. வறுவலும் ஹல்வாவும் கண்டிப்பாய் விலக்கவேண்டியவை. நெய்யை மிகவும் செட்டாய்ச் செலவழிக்க வேண்டும். ஒரே ஒரு கறி போதும். விலை கிராக்கியான பழங்கள் வேண்டவே வேண்டாம். பழ விஷயத்தில், நான் தான் குற்றவாளி என்பது எனக்குத் தெரியும். நண்பர்கள், எனக்காக மிக அதிக விலையான கனிகளை வாங்கிவிடுகிறார்கள். ஆகார விஷயத்தில், என் கோஷ்டிக்குள்ளேயே என் செலவே மிக அதிகமாயிருக்கிறது. அதற்கு நான் வருந்தத்தான் வேண்டியிருக்கிறது. அன்னையென விளங்கும் வெள்ளாட்டுப் பாலே என் உடலுரத்திற்குக் காரணம். சகோதரிபோல் இலங்கும் ஆரஞ்சுப் பழமே எனக்கு ஆயாசம் தீர்க்கிறது. இவ்விரண்டும், விலையில் அரிசி கோதுமைகளுடன் போட்டி போட முடியாது. இவ்விரண்டையும் தவிர இன்னும் அநாவசியமான பதார்த்தங்களைக் கொணர்ந்து வைத்து எனக்கு ஆசையூட்டி, என் கடனை அதிகப் படுத்தாதிருக்கும்படி என்னை விருந்தாயேற்று உபசரிப்பவர் எல்லாரையும் நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

—"ஹரிஜன்."

யாத்ரா மார்க்கம்

இயற்கையின் கட்டளை

ராமச்சந்திரபுரத்தில் நடந்த பொதுக் கூட்டம் இயற்கைக் காட்சிகள் சூழ்ந்த இடம். மண்ணை வெட்டிக் கொட்டிப் பிரசங்க மேடை அமைத்திருந்தார்கள். இந்த ஏற்பாட்டைச் செய்தவர்களின் கலைச் சுவையை வியந்து, காந்திஜீ மொழிந்ததாவது :— "சுற்றிலுமுள்ள இயற்கைக் காட்சிகளின் சௌந்தரியத்துக்காக, உங்களை நான் பாராட்ட மாட்டேன். இயற்கையின் அழகு மனிதனின் விசேஷ உரிமையல்ல. சில சமயம் தன் கொடுங் கை கொண்டு அவ்வழகை அவன் சிதைத்தும் விடுகின்றான். நல்லவேளையாக, நீங்கள் அவ்வாறு செய்துவிடாமல், அவ்வழகு மேலும் பிரகாசிக்கும்படி கலைச் சுவையுடன் இம்மேடையை அமைத்திருக்கிறீர்கள். நிற்க, சகல ஸ்திரீ புருஷரும் சமமாயிருக்க வேண்டுமென்பதே இயற்கையின் கட்டளை. மனிதன் தனது அகங்காரத்தால் உயர்வு தாழ்வு கற்பித்துவிட்டான். இது தெய்வீக அருள் வாக்கில் உதித்த தத்துவமாயிருக்கமுடியுமோ? ஒருக்காலுமில்லை. இயற்கையில் எங்கு நோக்கினும் இதைப்போன்றதோர் வேற்றுமையைக் காண முடியாது. இத்தீண்டாமைத் தீமையை நீங்கள் யாவருமே உங்கள் இதயத்தினின்றும் ஓட்டிவிடுவீர்களென நம்புகிறேன்."

கடனாளியும் முதலாளியும்

ஹரிஜன சேவா சங்கத்தில் ஹரிஜனங்களே அங்கத்தவராயிருக்க வேண்டுமென, ராஜமகேந்திரபுரத்தில் ஒரு ஹரிஜனப் பிரதிநிதி காந்திஜியிடம் கூறினார். அதற்கு ஐயன் கூறிய பதிலாவது :—"ஹரிஜன சேவா சங்கம் கடனாளிகள் சபை என்றும், ஹரிஜனங்கள் கடனைத் திருப்பிப் பெற வேண்டிய முதலாளிகள் என்றுமே நான் கருதுகிறேன். கடன்காரர் தான் உழைக்கவேண்டும். இந்தக் கடன்காரர் தங்கள் கடனைச் சரியாய்ச் செலுத்துகிறார்களோ என்பதையே நீங்கள் கவனித்து, நற்சாட்சி பகர வேண்டும். ஆதலால் எப்படி அவர்கள் தங்கள் கடனைச் செலுத்தலாம் என்று சொல்லும் ஆலோசனைச் சபைகளை நீங்கள் அமைத்துக் கொள்ளுங்கள்."

சிறையினின்று வெகுமதி

வேலூர்ச் சிறையில் கைதியாய்க் கிடக்கும் எல்லூர் ஸ்ரீமதி துர்க்கம்மாள் தமது நகை யொன்றை ஹரிஜன சேவை நிதிக்குக் காணிக்கையாக அனுப்பியிருந்தார். ஐயன் இதைப் பற்றி ஒரு பிரசங்கத்தில் வெகு களிப்புடன் பிரஸ்தாபித்தார். "இத்தகைய மகத்தான தியாகங்களைப் பார்க்கும் பொழுது யாருக்குத்தான் அளவிறந்த மகிழ்ச்சியும் ஆறுதலும் ஏற்படாது? தீண்டாமை என்னும் கொடுமை வெகு விரைவாய் மாய்ந்து வருகிறது என்று யார்தான் எண்ணாதிருக்க முடியும்?" என்று கூறினார்.

"யாசகத் திருப்பணி"

இந்தச் சுற்றுப்பிரயாணத்தை "யாசகத் திருப்பணி" என்று சொல்லிக் கொள்வதில் காந்திஜீக்கு வெகு பிரியம். ரயிலில் போகும்பொழுது, வழியே எந்த ஸ்டேஷனிலாவது வண்டி நின்றால், தாம் தூங்கினாலும் விழித்து எழுந்து உட்கார்ந்து விடுகிறார். ஜன்னல் வழியே வெளியில் தலையை நீட்டினாரானால் பணம் மழைபோல வருஷிக்கிறது. செப்புக் காசாயிருந்தாலும் சரி, அது ஜனங்களின் அனுதாபத்தைக் காட்டுகிறதென்று சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்ளுகிறார்.

கையெழுத்து

ஐந்து ரூபாய் கொடுக்கும் பெண்களுக்கெல்லாம் தம் கையெழுத்தைப் போட்டுக் கொடுத்துவிடுகிறார். சென்னையில் ஒரு பெண்மணி ஐந்து ரூபாய் செலுத்தி, கையெழுத்து வேண்டினாள். "இல்லை; ஒரு காப்பைத் தந்தாலென்ன?" என்று வேடிக்கையாகக் கேட்டார். காப்புகளையும் கழற்றிக் கொடுத்து விட்டாள் அவள்.

காந்தி:—"உன் பெற்றோர் ஒன்றும் சொல்ல மாட்டார்களா? வேண்டுமானால் நீ இந்தக் காப்புகளைத் திருப்பி எடுத்துக் கொண்டு விடலாம்."

அந்தப் பெண் ஒரு காப்பை எடுத்துக் கொண்டு "இதைத் தங்கள் ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்ளுகிறேன்" என்றாள்.

காந்தி:—"கொடுத்த வளையலுக்குப் பதில் செய்து போட்டுக் கொள்ளாதிருப்பாயா?"

அந்தப் பெண் "போட்டுக்கொள்ள மாட்டேன்" என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொன்னாள்.

அதன் பிறகே, காப்பை வாங்கிக் கொண்டார். பெண்ணும் புன்முறுவலுடன் அகன்றாள்.

ஓமகுண்டம்

விசாகப்பட்டணம் ஸ்திரீகளின் கூட்டத்தில் ஐயன் உணர்ச்சியைக் கொட்டிவிட்டார். "ஹரி ஜன இயக்கம் ஓர் ஓமகுண்டம் போன்றது. ஓமகுண்டத்தில் நெய்யை ஊற்ற ஊற்ற அது மேலும் மேலும் வளர்ந்து அதிக நெய்யை வேண்டுகிறதல்லவா? அதைப் போலத் தான் ஹரி ஜன சேவைக்கும் நீங்கள் கொடுக்கக் கொடுக்க மேலும் மேலும் பணம் தேவையாயிருக்கிறது. இவ்வியக்கத்திற்கு உதவுவோருக்கு நஷ்டமே கிடையாது; லாபந்தான். கொடுக்காதவருக்குத் தான் நஷ்டம். இதற்குக் கொடுப்பதால் கிடைப்பது புண்ணியம்; கொடாததால் இழப்பதோ உங்கள் ஆத்மாவையே தான்" என்று சொல்லி, மேலும் உருக்கமாய் நீண்ட நேரம் பேசினார்.

"வெட்கித் தலை குனிந்தேன்"

கரையில் மோதி வீசும் அலைகளுக்கெதிரே விசாகப்பட்டணம் கடற்கரையில் நடந்த கூட்டத்தில், காந்திஜீ ஒரு விஷயத்தைப்பற்றித் தமது வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டியதாயிற்று. அவர் சொன்னதாவது: "ஸ்டேஷனிலிருந்து என்னைக் காரிலே அழைத்து வந்த பொழுது, சாலையின் இரு மருங்கிலும் ஏழை ஹரிஜனங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தத் தரும காரியத்தைச் செய்த மனிதருக்கு வந்தனம் செலுத்த வேண்டியதுதான். ஆனால், இந்தக் காட்சியைக் கண்டபொழுது, நான் வெட்கத்துடன் தலை குனிந்துவிட்டேன். நீங்களும் நானும், சாப்பிடும்பொழுது, ஓர் கர்வம் பிடித்த மனிதன் நமக்கிடையே காரை விட்டுக் கொண்டு போவானாயின், நமது மனம் என்ன பாடுபடும் என்று யோசித்துப் பாருங்கள். ஜாதி ஹிந்துக்களுக்கு நான் சொல்லுவது, ஹரிஜனங்களுக்கு ஏதோ தான தர்மம் செய்யும்படியல்ல; தங்கள் ஹிருதயங்களையே திறந்துவிட வேண்டுமென்று சொல்லுகிறேன். உங்கள் ஹிருதயம், ஹரிஜனங்களின் சரணாலயமாய் விளங்கவேண்டும்."

சைவர்கள் ஆசி!

ஹரிஜன இயக்கத்துக்குப் புதிய பலம் ஒன்று கிடைத்திருக்கிறது. சென்ற மாத இறுதியில் சைவ சித்தாந்த சமாஜத்தின் 28ம் ஆண்டு நிறைவு விழா தஞ்சைக் கடுத்த கரந்தை யம்பதியில், பண்டித வேங்கடசாமி நாட்டார் தலைமையில் நடைபெற்ற போது அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன:—

தீர்மானங்கள்

1. ஆதித்திராவிடர் உள்ளிட்ட இந்துக்கள் அனைவருக்கும் சைவத் திருக்கோயில்களுக்குள் சென்று வணங்கும் உரிமை யுண்டென்ற கொள்கை சைவ சமயத்திற்கு உடன்பாடென்று இம் மகாநாடு கருதுகின்றது.

2. சிவ தீட்சை பெறுதல் முதலிய சமய உரிமைகள் ஆதித்திராவிடர் உள்ளிட்ட சைவசமயிகள் அனைவருக்கும் உண்டென்று இம் மகாநாடு கருதுகின்றது.

3. இந்துக்களில் சில வகுப்பினர் சைவத் திருக்கோயில்களிற் சென்று வழிபடும் உரிமை இல்லாதிருப்பது சைவ சமயத்திற்கு ஊறு விளைப்பதாக இருப்பதால், அவர்கள் அவ்வுரிமை பெறுவதற்குச் சைவர்கள் அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டுமென்று இம் மகாநாடு வேண்டிக் கொள்கின்றது.

சைவ சமயப் பெரியார்களும், தமிழ்ப் புலவர்களும் ஏராளமாகக் கூடியிருந்த அம்மாபெருங் கூட்டத்தில் இத்தகைய தீர்மானங்கள் நிறைவேறியது குறிப்பிடத் தக்கது. வாழிய சைவம்!

ஸினிமா ஆதிக்கம்

புராணங்களை யெல்லாம் மாற்றி நடிகர்கள் கண்டபடி நடிப்பதால் ஸனுதனிகள் மனது புண்ணுகின்றதாம். ஆகவே இனி 'ஸினிமா போர்டில்' படங்களைச் சோதித்து அநுமதிக்கும் அதிகாரம் தங்களுக்கும் இருக்கவேண்டு மென்று பம்பாய் வர்ணுசிரம ஸ்வராஜ்ய சங்கம் சர்க்காரைக் கேட்டிருக்கிறது.

"எது ஸனுதனம்?"

வட நாட்டில் நேகி ராமசர்மா பிரசித்தி பெற்ற தர்க்க சாஸ்திரியாவார். அவர் உண்மையான ஸனுதன மதத்தை நிர்த்தாரணம் செய்ய ஓர் 'வித்வத் ஸதஸை'க் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறுர். அவர் விடுத்துள்ள ஓர் நீண்ட அறிக்கையில் அடியிற் கண்ட குறிப்புகள் உள.

"மூட நம்பிக்கைகளெல்லாம் எவ்வாறே நாளடைவில் புகுந்து புகுந்து 'மதம்' என்ற போலி வேஷத்தோடு கூத்தாடவே, நமது ஸனுதன மதம் பாழாகி விட்டது. வேதத்திலும், வேதத்திற்கு ஒப்பச் செய்யப்பட்ட சில சாஸ்திரங்களிலுமே ஸனுதன மதம் விவரிக்கப்பட்டிருந்தது ஆதி காலத்தில். ஆனல் வேதகாலத்துக்குப் பின்பு அவரவர்கள் கொள்கைகளை ஸ்தாபிக்க, பலர் ஸனுதனத்தைத் திரித்துப் புதிய நூல்களைச் சிருட்டித்தனர். பல தினுஸான 'ஸனுதனி'கள் தோன்றலாயினர். 'ஸனுதனம்' என்பது தெய்வீக மதம். ஒரு மனிதனுக்கு மட்டுமென்றே ஒரு கூட்டத்துக்கு மட்டுமென்றே சாதிக்கப்படும் மதங்கள் மனிதனல் சிருட்டிக்கப் பட்டவைகளேயன்றித் 'தெய்வீக'மாக மாட்டா; ஸனுதனமாக மாட்டா."

இங்கிலாந்தில் 2 லட்சம் வீடுகளை இடித்துத்தள்ள வேண்டுமென்று ஏற்பாடாகியிருக்கிறதாம். ஆங்கிலேயரின் வாழ்க்கைக்கேற்ப அக்கட்டடங்கள் இல்லையாதலால் அவைகளை இடித்துத் தள்ளி அவைகளுக்குப் பதிலாகப் புது வீடுகள் கட்ட வேண்டுமென்பது எண்ணமாம். ஐயையோ அத்தனை வீடுகளையுமா? அந்தமாதிரி வீடுகள் கூட இல்லாமல் கஷ்டப்படுகின்ற தொழிலாளிகள் இந்தியாவில் இருக்கின்றனரே! அவர்களுக்கு இரங்கிக் காருண்ய துரைத்தனம் சில ஆயிரம் வீடுகளையாவது இந்தியாவுக்கு பார்ஸலில் அனுப்பலாகாதா? இடித்துத் தள்ள வேண்டுமா?

* *

இண்டர் மீடியட் வகுப்புக்கு ஏற்றதாகத் தமிழில் ரஸாயன சரித்திரத்தை யாராவது எழுத வேண்டு மென்றும் சிறந்த நூலுக்கு 1000 ரூபா சன்மானம் அளிப்பதாகவும் அண்ணுமலை சர்வகலாசாலை சொல்லி யிருக்கின்றது.

விற்பனைக்காக..........காக்கி, டிரில், டுயில்........

—(விளம்பரம்.)

இந்த ரகங்கள் வேண்டாம்; இனும் கொடுப்பதற்காக உள்ள ரகங்கள் இருந்தால் தெரியப்படுத்தவும்.

* * *

இறந்தவர்களுக்கு உயிர்!

—(கட்டுரைத் தலைப்பு.)

உயிரோடிருப்பவர்கள் பூலோகத்தை உடனே காலிசெய்ய வேண்டியதுதான்.

* * *

கொஞ்சும் கிளிகள்! கிளியரென்ஸ் ஸேல்.

—(புத்தக விளம்பரம்.)

வியாபாரியிடம் கொஞ்சிக் கொண்டிருக்கலாம். வாங்குபவரிடம் கொஞ்சுமா?

* * *

தமிழ்த் தாய்க்கு ஒரு சர்வ கலாசாலையினுல் செய்யக்கூடிய தொண்டுகளையெல்லாம் "நமது பத்திரிகை" யின் மூலம் செய்து நிறைவேற்ற வேண்டுமென்பது எங்கள் ஆசை.

—(ஒரு பத்திரிகாலய ஊழியர்.)

சரிதான்; வேலை கிடைக்காது அலையும் பட்டாளத்துக்கு ஆள் சேர்க்க இவ்வளவு ஏஜன்ஸிகள் தேவையா?

* * *

சுகந்த பாக்குத்தூளை...........

—(விளம்பரம்.)

பரிமள மூக்குத் தூளுக்குப் பதிலாக உபயோகிக்கலாம் போலிருக்கிறதே!

* * *

தமிழ் நடிகர் மகாநாடு

நாடகக்கலையின் சீர் குலைவு

—(செய்தித் தலைப்பு.)

மகாநாட்டின் நிகழ்ச்சி ரகஸ்யம் இதுவா? நாம் அப்படி நினைக்க முடியவில்லை.

* * *

........ஏஜண்டுகள் தேவை, லவர்ங்களுக்கு காரியதரிசி:

கினை ஆபீஸ், ***, எஸ்பிளநேள,....

—(விளம்பரம்.)

புரட்சி, சுவாமீ! புரட்சி! மூன்று எழுத்துக்களின் புரட்சி!

புத்தக விமரிசனம்

பாரத சக்தி

ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரைத் தமிழகத்துக்கு அறிமுகப் படுத்தத் தேவையில்லை. அவரால் பாடப் பெற்றுள்ள 'பாரத சக்தி' என்ற பெரு நூலின் முதல் மூன்று காண்டங்களும் கிடைத்துள. ஒரு வகையில் ஜான் பனியன் என்ற கவிஞன் எழுதிய "பக்தனின் யாத்திரை" போன்று இந்தக் காவியம் அமைக்கப்பட்டிருப்பினும் இடையிடையே உலகத்துப் பெரியார் சரிதைகளும் வெகு பொருத்தமாக சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஏசுநாதர், முகம்மது நபி, புத்தர்பிரான் முதலிய தீர்க்கதரிசிகளின் வாழ்க்கைகளும், அவர்களின் அருள் வாக்குகளும் அழகாக இசைக்கப்பட் டிருக்கின்றன. தமிழ் நாட்டில் கவிதா சக்தி மறைந்ததோ என ஐயமேற்பட்டுள்ள இத்தருவாயில் இந்த நூல் வெளிவந்திருப்பது தமிழ் மறுமலர்ச்சிக்கு உணர்ச்சி ஊட்டுவதாகும்.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட விருத்தப் பாக்கள்; நானூற்றுக்கு அதிகமான பக்கங்கள்; அழகான பதிப்பு; இந்த நூலுக்கு ஒன்றரை ரூபாயே விலை வைத்திருப்பது புதுவை பாரத சக்தி நிலையத்தாரின் தமிழ்ச் சேவையையே நிரூபிக்கின்றது.

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்

சிறை வாழ்வை ஓய்வு காலமென நினைக்கும் தேசியத் தலைவர் பலர். ஸ்ரீயுத அவிநாசிலிங்கம் அவர்களும், மதுரை ஸ்ரீயுத சுப்பராமன் அவர்களும் சிறை வாழ்வை அவ்வாறு நினைக்காமல் கடலூர் சிறையிலிருந்தபடியே ஓர் அரிய தேசத் தொண்டு செய்திருக்கிறார்கள். மகாத்மா காந்தியடிகளின் 'தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்' என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்கள்.

மகாத்மாவின் சத்திய சோதனை என்ற நூலைப் படித்தவர்கள், தம் சரிதையைத் தாமே எவ்வளவு அழகோடு மகாத்மா சொல்வாரென்பதை அறிந்திருக்கக் கூடும். 'தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்' என்ற ஆத்ம சரிதையும் உலக இலக்கியத்திலேயே ஓரிடம் பெற்று விட்டது. இந்த நூலைப் பிரசுரித்து உதவிய "காந்தி" பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் தெ. ச. சொக்கலிங்கத்துக்குத் தமிழ் நாடு கடமைப்பட்டுள்ளது.

புத்தகத்தின் விலை
முதற் பாகம்
ஒரு ரூபா
(தபால் கூலி வேறு.)

கிடைக்குமிடம்:
"காந்தி ஆபீஸ்"
சென்னை.

வீரகேசரி விட்டல்பாய் படேல்

இந்திய ராஜீய வானத்தில் தோன்றி மறைந்த விசித்திர நட்சத்திரம் வித்தல்பாய் படேல். அந்த வீரனின் திருநாமம் பாரத நாட்டில் எப்போதும் சாகப் போவதில்லை. அவரது ஜீவிய சரிதத்தையும் பாரத நாட்டினர் மறக்கலாகாது. அவரது தேச பக்தி, வீர உணர்ச்சி, அறிவுச் சொற்கள் முதலியவைகளை நமது பார்வைக்கு வந்துள்ள இந்தத் தமிழ் நூல் அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது. தேசத்துக்கு அத்தியாவசியமான இத்தகைய நூல்களை மேலும் மேலும் ஸ்ரீயுத கிருஷ்ணமாச்சாரியார் எழுத வேண்டுமென்றும், அல்லயன்ஸ் கம்பெனியார் பிரசுரிக்க வேண்டுமென்றும், தமிழர் ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ள இந்த நூலின் விலை அணா 12 தான்.

கிடைக்குமிடம்:
அல்லயன்ஸ் கம்பெனி,
மயிலாப்பூர், சென்னை.

ஸம்ஸ்க்ருத—தமிழ் அகராதி

"உபாத்தியாயரைவிட சிறந்த உதவியாயிருப்பது அகராதி" என்று ஓர் ஆங்கில வழக்கு மொழி உண்டு. நமது பார்வைக்கு வந்துள்ள இந்த அகராதி அதை மெய்ப்பிக்கின்றது. வடமொழி, தமிழ் மொழி இரண்டுக்குமே ஸ்ரீயுத கே. ஈ. வெங்கடேச சர்மா ஓர் அரிய தொண்டு செய்திருக்கிறாரென்று சொல்லவேண்டும்.

பள்ளிக்கூட மாணவர்கள், வடமொழி நூல்களைப் படிப்பவர்கள், பத்திரிகாசிரியர்கள் எல்லோருக்கும் இந்த அகராதியைச் சிபார்சு செய்கின்றோம். புத்தகம் வெகு வருஷங்களுக்கு உழைக்க வேண்டு மென்பதை யொட்டி உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு, அழகான கட்டடத்தோடு வெளியிட்டிருப்பது போற்றத்தக்கது.

இந்த அகராதியின்
விலை ரூபா
2—8—0
தான்.

கிடைக்குமிடம்:
மானேஜர்,
ஸ்ரீ ஆண்டாள் பண்டாபீஸ்,
109, சைனாபஜார் ரோட்,
சென்னை.

குமாரவிகடன் (பொங்கல் மலர்)

விகடப் பத்திரிகை யென்றால் வாசகர்களை எப்போதும் இளிக்கச் செய்வதே தொழில் என்று பலர் நினைக்கலாம். ஆனால் அதற்கு உட்படாமல் வேறு பல ரஸமுள்ள கட்டுரைகளையும் ஒன்றிரண்டு கவிதைகளையும் சேர்த்து இந்தப் பொங்கல் மலர் வெளியிடப்பட்டிருப்பது போற்றத்தக்கது. காமச் சுவை சித்தரிக்கப்படும் சிற்சில இடங்களில் மிஞ்சி வர்ணிக்கப்பட்டிருப்பதை மட்டும் 'வெட்டி' விட்டால் இந்த மலர் எல்லா வகுப்பினருக்கும் சுவை தருவது என்பதில் ஐயமில்லை.

மகாத்மாவின் தமிழ்நாட்டு விஜயம்

1934௵ ஜனவரி 24௳ முதல்
பிப்ரவரி 10௳ வரை



மகாத்மா காந்தியடிகள் தமிழ் நாட்டில் 1934-ம் வருஷம் ஜனவரி மாதம் 24ம் தேதியிலிருந்து பிப்ரவரி மாதம் 10ம் தேதி முடிய சுற்றுப் பிரயாணம் செய்வார். இவைகளில் மொத்தம் பத்து தினங்கள்தான் அடிகள் வேலை செய்யும் தினங்கள்.

மறவாதீர்கள்

ஜனங்களும் தொண்டரும் கவனிக்க வேண்டியவை

1. அடிகள் விஜயம் செய்யுமிடங்களில் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் வருகிறபடியால், கூட்டங்களை அமைதியாகவும், ஒழுங்காகவும் இருக்கும்படி செய்ய வேண்டிய பொறுப்பு, தொண்டர்களைச் சார்ந்ததாகும். ஆகையினால் அந்தந்த ஜில்லாக் காரியதரிசிகள் தகுந்த தொண்டர்களை முன்னதாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

2. மகாத்மா காந்தியடிகளின் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் பண்ணுவதற்கு, தொண்டர்கள் பிரயத்தனம் செய்யக் கூடாது.

3. காந்திக்கு ஜே, தீண்டாமை ஒழிக, முதலிய கோஷங்களில் எக்காரணத்தைக் கொண்டும் தொண்டர்கள் கலந்து கொள்ளக் கூடாது. காரியத்திற்கு இடைஞ்சலேற்படுவதோடு, தொண்டர்கள் இவ்வித கோஷங்களை ஆரம்பித்தாலும் சரி, அல்லது பின் தொடர்ந்து கோஷித்தாலும் சரி, கோஷங்களுக்கு இயற்கையில் ஏற்பட வேண்டிய தன்மையும் மதிப்பும் இல்லாமற் போய்விடுகின்றன.

4. பொது ஜனங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களைத் தொண்டர்கள் தெளிவாகவும் சாந்தமாகவும் இனிமையாகவும் எடுத்துரைக்க வேண்டும். வெறும் கூச்சல் போடுவதால் யாதொரு பலனும் கிடையாது. நன்கு எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றலுடைய ஒருவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5. மோட்டார்க்காரைச் சுற்றிக் கூட்டம் போடாமலிருக்கும்படி, பொதுஜனங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

6. வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களுள் பொறுப்புள்ள ஒருவருடைய உத்தரவு இல்லாமல், காந்தியடிகள் இருக்கும் மோட்டாரிலாயினும் சரி அவரைத் தொடரும் இதர மோட்டாரிலாயினும் சரி, தொண்டர்கள் வந்து ஏறக்கூடாது.

7. இரவில் எட்டு மணிக்குப் பிற்பாடு—மறு நாட் காலை 6 மணி வரையில் எந்த ஸ்டேஷன்கள் வழியாக மகாத்மா காந்தியடிகள் போனாலும் சரி, அந்த ஸ்டேஷன்களில் பொது ஜனங்கள் கும்பல் கூடக் கூடாது. எந்தக் காரணத்தைக் கொண்டும் இரவில் கூச்சல் போடக்கூடாது. பிரயாணம் செய்பவர்களுடைய சௌகரியத்தைச் சிறிதும் கவனிக்காமல் கூச்சலிடுவது, யாருக்கு மரியாதை செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களுக்கு மரியாதைக் குறைவாகும் என்பதை ஜனங்கள் உணரவேண்டும்.

8. வரவேற்புப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்காகக் காந்தியடிகள் சுற்றுப் பிரயாணம் செய்யவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். மேல் ஜாதியார் எனப் படுவோர் ஹரிஜனங்களுக்கு இழைத்துள்ள தீமைகளுக்காக மனம் வருந்தி, ஹரிஜன இயக்கத்திற்கு வேண்டும் பொருள் உதவியும் அந்தக்கரண சுத்தியோடு தொண்டாற்றியும், ஆத்ம பரிசுத்தம் அடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதற்காகவே காந்தியடிகள் இந்தச் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். ஆகையினால் ஸ்டேஷனுக்கு வருபவர்கள் ஹரிஜனத் தொண்டிற்காகப் பணம் சேர்த்துக் கொண்டு வரவேண்டியது அவசியம்.

ஹரிஜன சேவக சங்கம்,
தமிழ் நாடு.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.